
செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை



சிலம்பு-௪௭] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௪, பங்குனி (Apr. '73) [பரல்-௮

‘செந்தமிழ்ச் செல்வி’

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

வருக! வருக!

சிறந்த நூல்களைப் பெற்று மகிழ்க!

கும்பகோணத்தில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகக் கிளை நிலையத்திறப்பு

தமிழர் கலை, நாகரிகம், பண்பாடு, சமயம் ஆகியவற்றை அனைத்துலகும் அறியும்படி அரிய தமிழ் நூல்களையும், ஆங்கில நூல்களையும், எழிலுறப் பதிப்பித்துவரும் பதிப்பகம் திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்பதைத் தமிழன்பர்கள் நன்கு அறிவர்.

இத்தகைய நூற்பதிப்புக் கழகம் பாண்டி நாட்டில் துவங்கிப் பைந்தமிழ் நாடெங்கும் பரவி வருகின்றது. இன்று மதுரையிலும், கோவையிலும், நெல்லையிலும் கழகத்தின் கிளைகள் சிறந்த முறையில் இயங்கி வருகின்றன. தலைமை நிலையம் சென்னையில் செயல்பட்டு வருகின்றது. அங்ஙனமே சோழ நாட்டில் கழகத்தின் கிளையொன்று நிலைபெறுதல் வேண்டுமென்று தமிழன்பர்கள் பலர் விரும்பினர். அவர்தம் விருப்பத்திற்கிணங்கத் தஞ்சைமாவட்டத்தில் ஒரு கிளை நிறுவ நினைத்தோம். அதற்கேற்ற இடம், பொன்னியாறு பாயும் பதியும், பாடல் பெற்ற தெய்வத் திருக்கோயில்கள் பலவற்றின் உறைவிடமும், வணிகத் தலைநகருமாகிய கும்பகோணம் (குடமூக்கு) எனப்படும் குடந்தைப் பதியே சாலப் பொருத்தமுடையதெனக் கருதிக் கழகக் கிளை நிலையம் ஒன்றினைக் கும்பகோணம் நகர உயர்பள்ளிச் சாலை, 28 ஆம் எண்ணுள்ள கட்டடத்தில் அமைத்துள்ளோம்.

இக் கிளை நிலையம் நிகழும் வள்ளுவராண்டு 2004, சித்திரைத் திங்கள் 3 ஆம் நாள் (15-4-1973) துவங்கப் பெறுகிறது.

தமிழ் ஆர்வலர்களும், சமய மெய்யன்பர்களும், கல்வித் துறையில் ஈடுபாடுடையோரும், மாணவர்களும் கழகக் கிளை நிலையத்திற்கு வருகை தந்து தத்தமக்கு வேண்டிய நூல்களை வாங்கிப் படித்துப் பயன் பெறுவதோடு, எமது நூல் வெளியீட்டுப் பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,
1/140, பிரகாசம் சாலை
(பிராட்வே), சென்னை - 1
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1

வ. சுப்பையா பிள்ளை,
கழக ஆட்சியாளர்.


கழக நூல்களுக்குத்
தமிழக அரசு பரிசு
(7 - 4 - '73)



'சட்டத் தமிழ்' நூலுக்கு முதற் பரிசு பெற்ற
திரு. மா. சண்முக சுப்பிரமணியம், பி.ஏ. பி.எல்.




'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்'
இரண்டாவது பரிசு பெற்ற திரு. பி. எல். சாமி, பி. எஃசி.



'தமிழக சாவகக் கலைத் தொடர்புகள்'
இரண்டாவது பரிசு பெற்ற
நுண்கலைச் செல்வர் அ. இராகவன்



'கொசு ஒழிப்பு' நூலுக்கு இரண்டாவது பரிசு பெற்ற
திரு. க. வ. முத்தையா, எம். ஏ.



பரிசு பெற்ற கழக நூல்கள் நான்கிற்கும்
பதிப்பாசிரியர் திரு. வ. சுப்பையா சான்றிதழ்கள் பெறுதல்

கழக நாடகப் போட்டி



'மனோன்மணீயம்' தந்த

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை



கழக நாடகப் போட்டியில்
ரூ. 1000 பரிசு பெற்ற
'அனிச்ச அடி' நாடகத்தை இயற்றிய

திரு. புலவர் ஆ. பழனி
மீ. சு. உயர்நிலைப் பள்ளி
காரைக்குடி.

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு உ००௪, பங்குனி	பரல்
சஎ	ஏப்பிரல் 1973	அ

திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(முன் பரல் எ பக்கம் ௩௭௪௯ தொடர்ச்சி)

டாக்டர் மு. வ. திருக்குறள் தெளிவுரை வெளியிடப் பெற்ற அதே 1949 ஆம் ஆண்டில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறை விரிவுரையாளர் சித்தாந்த கலாநிதி ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் எழுதிய 'தெய்வப்புலவர் திருவள்ளுவர்' என்ற ஆராய்ச்சி நூல் கழக வழி வெளியிடப் பெற்றது. இந்நூல் 18 × 12 செ. மீ. அளவில் 86 பக்கங்களில் 'தெய்வப்புலவர்', 'திருவள்ளுவர் வாழ்வு,' 'திருவள்ளுவரைப்பற்றிய கதைகள்', 'திருவள்ளுவரது வரலாற்ருராய்ச்சி' ஆகிய நான்கு தலைப்புகளில் எளிய இனிய செந்தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ளது. உயிர் வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் உண்மைகளை ஒளியாமல் எடுத்துரைக்குந் திருக்குறளை வழங்கிய திருவள்ளுவரது வரலாற்றினைத் தெள்ளிய நிலையில் வடித்துத் தரவேண்டியது நம்மனோர் கடமை எனக் கொண்டே ஆசிரியர் இந்நூலை எழுதுவாராயினர்.

ஆசிரியர் இந்நூலின் முன்னுரையில் "திருக்குறளையே துணையாகக் கொண்டு திருவள்ளுவரின் வரலாறு காணும் உண்மை நெறியைப் பேராசிரியர் அருட்டிரு விபுலானந்த அடிகள் 'வேதாந்த கேசரி' என்னும் ஆங்கில இதழில் எழுதிக் காட்டியருளினர். அந்நெறிபற்றியே திருவள்ளுவர் வரலாறு

இதன்கண் வடித்துத் தரப்படுகிறது. இதனோடு திருவள்ளுவரைப் பற்றி வழங்குங் கதைகளும், அவற்றுள் கொள்வனவும் தவிர்வனவும் ஆராய்ச்சி செய்யப் பெற்றுள்ளன.'' என்று எழுதியுள்ளனர். கழகம் இதனை ஏற்று அச்சிட்டு வெளியிடுவதைப் பற்றித் ''திருவள்ளுவர் வழங்கிய திருக்குறளைப் பல் வேறுவடிவில் பல்வேறு வகையில் வெளியிட்டு மக்களிடையே பரப்பும் பெரும்பணியைக் கழகம் செய்து வருகிறது'' எனவுங் கூறி மகிழ்கின்றனர்.

இந்நூல் அச்சிடப் பெற்று வெளிவருவதற்கு முன்னும் பின்னும் இதன் ஆசிரியப் பெரும்புலவர்க்கும் கழகத்துக்குமுள்ள தொடர்புகளைப் பற்றி ஈண்டு விளக்கி எழுதுவது இன்றியமையாததாகும்.

1939 ஆம் ஆண்டில் பெரும் பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் வடார்க்காட்டு மாவட்டம் போளூரில், மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தார். அம்மாவட்டக் கல்வியதிகாரியாகவிருந்த உயர்திரு ச. சச்சிதானந்தம்பிள்ளையவர்கள் ஒருமுறை கழகத்திற்கு வந்திருந்தபோது ''சித்தாந்தச் செந்நெறிப் புலமையும் செந்தமிழ் இலக்கண இலக்கியப் புலமையும் மிக்க தமிழாசிரியர் ஒருவர் போளூரில் இருக்கிறார். அவர் நாவலர் வேங்கடசாமி நாட்டாரவர்களிடமும், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையவர்களிடமும் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகப் பாடங்கேட்டுச் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பட்டம் பெற்றவர். அவர் சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர். அவரை உங்கள் கழக நூற்றுண்டுக்கு நன்கு பயன்படுத்தலாமே'' என்று கூறினர். அதனைக் கேட்டு யான் பெருமகிழ்வெய்தி ''விரைவிலே போளூருக்குச் சென்று அப் புலவர் அவர்களைக் கண்டு கழகத்துக்கு அவர்கள் அறிவாற்றல்களைப் பயன்படுத்த முயல்வேன்'' என்று கூறினேன்.

கழகப் பாட நூல்களைப் பள்ளிகளில் பாடமாக வைப்பதன் பொருட்டு வடார்க்காட்டு மாவட்டப் பள்ளிகளைப் பார்க்கக் கருதினேன். ஒருநாள் காலையிற் புறப்பட்டு, வாலாசாபேட்டை, ஆர்க்காடு, ஆரணி ஆகிய ஊர்களிலுள்ள பள்ளிகளைப் பார்த்து விட்டுப் போளூரை யடைந்து ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் இல்லத்துக்குச் சென்றேன். புலவரவர்கள் வெளியூர்க்குச் சென்றிருந்தமையால் கடிதம் எழுதி வீட்டம்மையாரிடங் கொடுத்துவிட்டுத் திருவண்ணாமலைக்குச் சென்று அங்கே என் வேலைகளை முடித்துக்கொண்டு சென்னைக்குத் திரும்பினேன்.

எனது கடிதத்தைப் பார்த்தபின் என்னோடு பேசுவதற்குப் புலவரவர்கள் சென்னைக்கு வந்தனர். அப்போது ஐம்பெருங் காப்பியம், ஐஞ்சிறு காப்பியங்களுள் **சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சூளாமணி, பெருங்கதை** ஆகிய ஐந்து நூல்கட்கும் சுருக்கப் பதிப்புகளைக் கழகவழி வெளியிட வேண்டுமென்று விரும்பினேன். புலவரவர்களும் எனது விருப்பத்தை மகிழ்வோடு ஏற்று, முதற்கண் 'சீவக சிந்தாமணிச் சுருக்கம்' எழுதியனுப்பு வதாகக் கூறினர். அங்ஙனமே அவர்கள் எழுதியனுப்பிய சீவகசிந்தாமணிச் சுருக்கப் பதிப்பில் முழுநூலில் ஏறக்குறைய காற்பங்குச் செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. கதைப் போக்குக் கெடாமல் இனிய செய்யுள்களைத் திரட்டிக் கோத்து, இடையிடையே விடுக்கப்பட்ட செய்யுள்களின் தொடர்பைச் சுருக்கமாக ஆங்காங்கே எளிய உரை நடையில் எழுதிச் சேர்த்து, ஒவ்வொரு பக்கத்திலும் அடியில் தெளிவான உரைக்குறிப்புகளும் வரைந்து விளக்கமான ஓர் ஆராய்ச்சி முன்னுரையோடு இந்நூல் பதிக்கப்பெற்றுள்ளது. செய்யுள்கள் சீர்பிரித்தும் கடினசந்தி பிரித்தும் உரிய தலைப்புகளுடன் அமைக்கப் பெற்றுள்ளன. நச்சினார்க்கினியருரையோடு சீவக சிந்தாமணியைப் பயில்வார்க்கு இச்சுருக்கநூலும் உரையும் நன்கு பயன்படுவனவாயிற்று. இது 1941 திசம்பரில் 18×12 செ. மீ. அளவில் 376 பக்கங் கொண்டதாய் உயர்ந்த கட்டடஞ் செய்து வெளியிடப் பெற்றது.

சங்க இலக்கியங்கள் பலவற்றை ஏட்டுச் சுவடிகளினின்றும் பெயர்த்து வெளியிட்டுப் பெரும்புகழெய்திய முதுபெரும்புலவர் **டாக்டர் சாமிநாதையர்** அவர்கள் முதன்முதல் வெளியிட்ட நூல் 'சீவக சிந்தாமணி நச்சினார்க்கினியர் உரை' யேயாகும். அதே போல் கழகம் முதன் முதல் வெளியிடுமாறு திருவருள் கூட்டியதும் 'சீவக சிந்தாமணிச் சுருக்க நூலே' யாகும். ஆனால், இச் சுருக்க நூலாசிரியர் எட்டுத் தொகையில் அகப் பொருள் நூலாகிய ஐங்குறு நூற்றின் மருதக்கலிப் பாட்டு நூறுக்கும் உரை எழுதினர் என்பதும் அது அவர்தம் மதிப்பு மிக்க மாணவர் புலவர் கோவிந்தனவர்களால் 1938 இல் சேயாற்றில் அச்சிட்டு வெளியிடப்பெற்ற தென்பதும் அறிதற் பாலன. புலவர் ஔவையவர்கள் தொடர்பு கழகத்துக்கு ஏற்பட்டபின் புலவர் கோவிந்தனவர்களிடம் விற்கப்பெறாமல் தங்கிக்கிடந்த மருதக் கலி உரைப்படிகள் யாவும் கழகவழி விற்றுக்கொடுக்கப் பெற்றன.

சீவக சிந்தாமணிச் சுருக்கம் வெளிவந்தபின் அதைப் போலவே புலவர் ஔவையவர்கள் எழுதிய **'சிலப்பதிகாரச்**

சுருக்கம்' 1942 இலும், மணிமேகலைச் சுருக்கமும், சூளாமணிச் சுருக்கமும் 1943 இலும் வெளியிடப் பெற்றன. 1945 இல் அவர்கள் எழுதிமுடித்தனுப்பிவைத்த 'பெருங்கதைச் சுருக்கம்' என்ற நூல் மட்டும் இன்றுகாறும் அச்சிடப் பெறவில்லை. விரைவிலே அது வெளியிடுவதற்குத் திருவருள் துணைபுரியும் என்று நம்புகிறேன்.

மேலே குறிப்பிட்ட சுருக்க நூல்கள் ஐந்தனுள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய மூன்றுக்கு மட்டும் விரிவான ஆராய்ச்சி யுரை எழுதியுள்ளனர். அவற்றுள் முதல் இரண்டுக்குமுரிய ஆராய்ச்சி யுரைகள் 1942 இலும் சீவக சிந்தாமணி ஆராய்ச்சியுரை 1943 இலும் கழகவழி அச்சிட்டு வெளியிடப்பெற்றன. சூளாமணிக்கும் பெருங்கதைக்கும் ஆராய்ச்சியுரை எழுதப் பெறவில்லை.

புலவர் ஒளவையவர்கள் 1941இல் செங்கம் உயர்நிலைப் பள்ளியிலும் 1942இல் திருப்பதிக் கீழ்த்திசை ஆராய்ச்சிக் கழகத்திலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்து 1943 சூன் முதல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ் ஆராய்ச்சித் துறையில் விரிவுரையாளராக அமர்த்தப்பெற்றனர். அங்கே 8 ஆண்டுகாலம் பணிபுரிந்து 1951 சூலைத் திங்களில் மதுரைத் தியாகராாசர் கலைக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தப்பெற்றனர்.

திருப்பதியில் வேலை பார்க்கும்போது கழக அமைச்சரும் என் அருமைத் தலைவனுருமாகிய திருவரங்கனுர் அனுப்பிய ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்ருகிய யசோதர காவியம் ஏட்டுச் சுவடியுடன் தமக்குக் கிடைக்கப்பெற்ற வேறு இரண்டு சுவடிகளையும் வைத்து ஆராய்ந்து அந்நூலுக்குத் தெளிவான உரை எழுதி அனுப்பிவைத்தனர். அதனைக் கழகம் அச்சிட்டு 1944 சூன் திங்களில் வெளியிட்டது.

இப்போது கழகச் செயற்குழுத் தலைவராயிருக்கும் திருவாளர் மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள் 1938இல் பாகனேரி தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்க வெளியீடுகளாகக் கலித்தொகை-நச்சினர்க்கினியருரை, சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு ஆகிய சங்க நூல்களைக் கழகவழி வெளியிட விரும்பி முதலீடு செய்வதாகத் தெரிவித்தார்கள். கழகம் அதற்கிசைந்து 1938இல் கலித்தொகை நச்சினர்க்கினியர் உரையினைக் கழகப் புலவர் திரு இளவழகனர் எழுதிய உரைவிளக்கம், கலித்தொகை மாட்சி ஆகியவற்ருேடு பதித்து வெளியிட்டது. அடுத்துச் சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு ஆகிய மூன்று நூல்கட்கும் புத்துரை

எழுதித் தருமாறு முதுபெரும் புலவர் நாவலர் வேங்கடசாமி நாட்டாரவர்களை வேண்டினேம். அவர்களும் அதற்கிசைந்து முதற்கண் சிலப்பதிகாரத்துக்கு விளக்கவுரை எழுதித் தந்தனர். அஃது எட்டுப் பதிப்புகளைப் பெற்றுச் "சிலப்பதிகாரம் நாட்டார் உரை" எனப் பாராட்டப் பெறுகின்றது. அகநானூற்றுக்குத் திரு நாட்டாரவர்கள் தம் கெழுதகை நண்பர் கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை யவர்களைத் துணைக்கமர்த்திக்கொண்டு விளக்கவுரை எழுதி முடித்தனர். அதன்பின் மணிமேகலை முதல் 26 காதைகட்குத் தம் அருமைத் திருமகளார் சிவ. பார்வதியம்மையாரைக் கொண்டு பதவுரையும் தாம் விளக்கவுரையும் எழுதி ஏனைய நான்கு காதைகட்கும் சமய நூல்களை ஆய்ந்து எழுதவேண்டுமென்று கருதுகையில் திடுமெனக் கூற்றுவன் நாட்டாரவர்களது இன்னுயிரைக் கவர்ந்து சென்று இறைவன் திருவடி நீழலிற் சேர்ப்பித்தனன். எனவே, தமக்குக் கல்வி கற்பித்த தம் ஆசிரியர் கரந்தைக் கவியரசு விரும்பியபடி புலவர் ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் புத்தசமயக் கோட்பாடுகளையும் தருக்க நூல்களையுங் கற்றுத் தெளிந்து இறுதிக் காதைகள் நான்கிற்கும் விளக்கவுரை எழுதித் தம் ஆசிரியர்க்குப் புகழ் ஈட்டிக் கொடுத்தனர்.

1944 சூலைத் திங்கள் 11ஆம் நாள் புலவர் ஔவை அவர்கள் எழுதிய கடிதத்தில்,

> "அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ., எம். எல். அவர்கள் நோயுற்று உடல் நலிவால் பணியினின்று 1—7—1944இல் விலகவேண்டியதாயிற்று. அவர்கட்குச் சிறிது நேரம் பேசவோ எழுதவோ நடக்கவோ முடியாது. கை நடுக்கம் மிகுதியாய்விட்டது. அவரைக் காணுந்தோறும் கவலை பெரிதாகிறது. அவர்கள் தாம் இப்போதிருக்கும் நிலையில் எங்கே போவது எவ்வாறு வாழ்வது என்ற கவலையில் செய்வதறியாது திகைத்த வண்ணம் இருக்கின்றார். சிதம்பரத்தைவிட்டுப் போவதற்கே உடல் இடந்தருமோ என்ற கவலையும் அச்சமும் அடைகின்றார்" என்றும் இன்னும் இவைபோன்ற மனவருத்தந் தரத்தக்க தொடர்களையும் குறிப்பிட்டு, "இவற்றிற்குத் தங்கள் அன்பான பதில் எதிர்பார்க்கிறேன்."

என்று முடித்திருந்தார். அக் கடிதம் எனது நெஞ்சத்தை நீராய் உருக்குவதாயிற்று.

28-4-1944இல் என் அருமைத் தமையனாரும் கழக அமைச்சருமான திருவரங்கனார் திடுமென இறையடி சேர்ந்தமையால் அவர்களது பெரிய குடும்பப் பொறுப்பினையும் நெல்லையிலும் சென்னையிலுமுள்ள கழக நிலையங்களின் பொறுப்பினையும் ஏற்று

நெல்லைக்கும் சென்னைக்கும் அடிக்கடி சென்றுவரவேண்டிய நிலையிலிருந்தேன் என்றாலும் பேராசிரியர் எம். எல். பிள்ளையவர்கள் உடல் நலிவுற்று ஆதரவற்ற நிலையில் இருப்பது தெரிந்தவுடன் அப்போது கழகத் தலைவராகவும், பெரியார் ஈ. வெ. ரா, அவர்கள் மதிப்புக்குரியராகவு மிருந்த உயர்திரு ப. சிதம்பரம் பிள்ளை (பி.ஏ., பி.எல்.) அவர்களிடம் சொல்லவே, அவர்கள் 'நீர் திருப் பிள்ளையவர்கட்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமென்று கருதுகிறீரோ அத்தனைக்கும் யான் ஒப்பம் போடுகிறேன்' என்று ஊக்கவுரை அளித்தனர். உடனே, புலவர் ஔவை அவர்கட்குத் திரு எம். எல். பிள்ளை அவர்களைப் புகைவண்டியில் முதல் வகுப்பில் ஏற்றித் துணையோடு நெல்லைக்கு அனுப்பி வைக்குமாறு கடிதம் எழுதியதோடு தந்தியுங் கொடுத்தேன். அதன்படி திரு பிள்ளையவர்கள் துணையோடு நெல்லைக்கு அனுப்பி வைக்கப்பெற்றனர். திருநெல்வேலிச் சந்திப்பு நிலையத்தில் அவர்களை வரவேற்று நெல்லைக் கழக நிலையத்திலே தங்குவதற்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செவ்வே செய்து கொடுத்ததோடு உதவிக்குப் பணியாளர் இருவரும் அமர்த்தப்பெற்றனர். நோய் நாடி அது தீர்தற்காகும் மருத்துவத்துக்கும் ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. 'நவரக்கிழி பிழிச்சல்' போன்ற சிறந்த ஆயுர்வேத மருத்துவம் செய்யப்பெறவும் நோய் தணிந்து, நலம் பெறுவதுபோல் தோன்றிப் பின் திடுமென நோய் கடுமையாகி 30-4-1945இல் இறையடி சேர்ந்தமை தமிழ்நாடு செய்த தவக் குறையேயாகும்.

புலவர் ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் திரு எம்.எல். பிள்ளையவர்கட்குப் பொருளுதவி செய்யும் பொருட்டு முயன்றதில் வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், தேசிகவிநாயகம் பிள்ளை முதலியோரிடமிருந்து ரூ. 125 வந்திருக்கிறதென்றும், ரூபா ஆயிரங்கூட இதுவரை சேரவில்லையென்றும் தெரிவித்தார்கள். புலவரவர்கள் திரு பிள்ளையவர்களுக்கு இவ்வகையில் காலத்தினாற் செய்த உதவி என்றும் மறக்கற்பாலதன்று.

1948இல் புலவரவர்கள் 'தமிழ் நாவலர் சரிதை' என்ற பழம் பதிப்பொன்றைச் செப்பஞ்செய்து விளக்கம் எழுதி அனுப்பி வைத்தனர். அதனை 1949இல் கழகம் அச்சிட்டு வெளியிட்டது.

1950 சனவரி முதல் நாள் எழுதிய கடிதத்தில்,

"சேரர் வரலாறு முதற்பகுதி 120 பக்க அளவில் முடித்து வருகிறேன். 2 ஆம் பகுதி 150 பக்கம் வரும். பொங்கல் விழாவிற்கு,

மணமக்களை வரவேற்றுச் சிறப்புச் செய்யவேண்டியிருக்கிறபடியால் அன்புகூர்ந்து ஒரு நூறு ரூபா அனுப்ப வேண்டுகிறேன். பொங்கல் முடிந்ததும் முதற்பகுதி அனுப்புவேன். 1—2—50இல் இரண்டாம் பகுதி அனுப்புவேன்.''

என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், 24-3-1951இல் எழுதிய கடிதத்தில்,

''சேரர் வரலாறு (250 பக்கம்) விலைக்கு விற்கவும் துணிவு செய்யப்பட்டது. விலக்கமுடியாத காரணத்தால் இரண்டொரு நூல்களைப் பிறருக்குக் கொடுத்துவிட்டேன்.''

என்று தெரிவித்துள்ளனர்.

9—8—1951 இல் மதுரையிலிருந்து எழுதிய கடிதத்தில்,

''மதுரைத் தியாகராசர் கல்லூரியில் வேலை ஒப்புக்கொண்டேன். சேரர் வரலாறு மட்டும் வேறொரு நண்பர் பெயரால் அச்சாகிறது. பல்கலைக் கழக விதி இடந்தாராமையால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. நற்றிணையைக் கழக வெளியீடாகச் செய்வது உறுதி. அதில் தடையிராது. இடையில் ஐங்குறுநூற்றை முடிக்கக் கருதுகிறேன்''

என்று குறிப்பிட்டுள்ளார்.

1951 மேத் திங்கள் தொடக்கத்தில் இலங்கை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவுக்குப் போயிருந்தபோது கடுமையான அம்மைநோய் கண்டு 40 நாள் தொற்றுநோய் மருத்துவமனையில் தங்கி நலம் பெற்றுப் பின் திருக்குற்றாலத்தில் ஓய்வு பெறுவதற்காகத் தங்கியிருந்தேன். அப்போது புலவரவர்கள் என்பால் எத்துணை அன்பும் நம்பிக்கையும் வைத்திருந்தார்கள் என்பதை மதுரையிலிருந்து 12—9—1951 இல் எழுதிய கடிதம் தெளிவு படுத்துகின்றது. கடிதம் வருமாறு:

''குற்றாலம் மத்தளம்பாறை ரோடில் இருக்கும் பெருந்திருவாளர் கருமுத்து தியாகராசச் செட்டியாரவர்களைக் கண்டு என்னைப்பற்றி வேண்டுவன கூறி என் ஆராய்ச்சிக்கு ஆதரவு செய்யச் செய்வது தங்கள் பொறுப்பு. இனி யாதும் கழகவழியால் அல்லது செய்யேன். நற்றிணை மிகச் செவ்விய முறையில் கழகம் வெளியிடற்குரியது. கழகத்திற்குக் கை தந்தேன். பிறழேன், உறுதி.''

8—11—1955வரை சேரர் வரலாறு அச்சிடப் பெறவில்லை என்பது அவர்கள் அன்று எழுதிய கடிதத்தினால் தெரிய வந்தது.

''வெளியிடும் செட்டியாருக்கும் அச்சகத்தாருக்கும் இடையே உண்டான பிணக்கினால் சேரர் வரலாறு சுணங்கி வருகிறது.

ஐங்குறு நூறு உரை மட்டும் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாக அச்சிடப் பெறுகிறது.''

சேரர் வரலாறு தமது சொந்த வெளியீடாக மதுரையில் அச்சிடப் பெறுவதுபற்றி அவர்கள் 30—7—65 இல் எழுதிய கடிதத்தால் தெரியலாயிற்று.

மேலே கண்ட செய்திகளினால் சேரர் வரலாறும், ஐங்குறு நூறு உரையும் கழகவழி வெளியிடுதற்கு வாய்ப்பில்லாது போயிற்று. அதேபோல அவர்கள் கழகவழி வெளியிட விரும்பி எழுதிய நற்றிணை உரையும் வேறு பதிப்பகத்தார்க்குப் போய்விட்டது. அங்ஙனம் அது வெளிவந்தபின் ஆசிரியர்க்கு மன நிறைவு ஏற்படவில்லை என்பது மட்டும் தெரியவந்தது.

திருவாசகம் நான்கு அகவல்கட்கும் மறைந்த மறைத்திரு மறைமலையடிகள் விரிவுரை எழுதியுள்ளமையால் எஞ்சிய பகுதிக்கு விரிவுரை எழுதுமாறு புலவர் ஔவையவர்களை வேண்டினேன். அவர்களும் திருச்சதகத்துக்கு விளக்கவுரை எழுதி வருவதாக 1947 பிப்ரவரித்திங்கள் 2ஆம் நாள் கடிதத்தில் தெரிவித்தனர். அப்போது பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் உரை எழுதி வருவது தெரிந்ததும் தாம் எழுதிவைத்திருந்ததை அவர்களிடமே கொடுத்துவிட்டனராம். அற்புதத் தேவாரத் திரட்டுக்கு உரை எழுதுமாறும் வேண்டியபடி 5—7—47 இல் கடிதத்தில் விளக்கவுரை எழுதி வருவதாகத் தெரிவித்தனர். அதுவும் எழுதி முடிக்கப் பெற்றதாகத் தெரியவில்லை. ஆனால், கழகப் புலவர் சித்தாந்த பண்டிதர் ப. இராமநாத பிள்ளையவர்கள் திருவாசகத்துக்கும் அற்புதத் தேவாரத்திரட்டுக்கும் விரிவுரை எழுதி அவை கழகவழி வெளியிடப் பெற்றுள்ளன.

திருமணப் பரிசுக் கேற்றபடி சங்ககாலப் பெண்பாற் புலவர் பாடிய நல்லிசைப் பாடல்களைத் தொகுத்து விளக்கமும் ஆராய்ச்சியுரையும் எழுதி அழகிய பதிப்பொன்று வெளியிடுதல் வேண்டுமென்று புலவர் ஔவை அவர்களிடம் கூறினேன். அவர்களும் அதற்கிசைந்து 'சங்ககாலச் செந்தமிழ்ச் செல்வியர்' என்ற நூலை எழுதித் தந்தனர். ஆனால், எனக்கு மன நிறைவு தரத்தக்க நிலையில் அந்நூல் அமையவில்லை யாதலால் அஃது அச்சிடப் பெறாமலே யுள்ளது. அதனைச் செப்பஞ் செய்து வெளியிடுதற்குரிய காலம் வரும் என்று நம்புகிறேன்.

சூளாமணிச் சுருக்கம் முன்னமே வெளியிட்டமையால் அதையொட்டிச் சூளாமணி முழு நூலுக்கும் விளக்கவுரை எழுதித் தரும்படி செந்நாப் புலவர் ஔவை யவர்களிடம் கூறினேன்.

பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களை யெல்லாம் ஏட்டுச் சுவடியினின்றும் பெயர்த்து வெளியிடும் முயற்சியினை மேற்கொண்டு உயர்திரு சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் தோலாமொழித் தேவர் சூளாமணியினை ஆராய்ச்சி முன்னுரையோடு அச்சிட்டு வெளியிட்டனர். அது வேறு ஐந்து ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராக விருந்த திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் துணைகொண்டு செப்பஞ் செய்யப் பெறுகிறதென்று 23—3—1945 கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

கழக நூலாசிரியர்களுள் ஒருவரான திரு இராமசாமிப் புலவரைக் கொண்டு பதவுரை எழுதச் செய்து புலவர் ஔவை யவர்கள் அதனைச் சரிபார்த்து விரிவுரை எழுதுவதானால் 2131 செய்யுள்களைக் கொண்ட பெரிய இலக்கியத்தை விரைந்து அச்சிட்டு வெளிப்படுத்தலா மென்று கருதி எழுதினேன். புலவர் அவர்களும் அதனை வரவேற்றனர்.

19—11—1948 கடிதத்தில்,

> "திரு இராமசாமி வந்தார். திரு வெள்ளைவாரணமும் யானும் கலந்து அவரிடம் சூளாமணியை ஒப்படைத்தோம். மாதிரிக்கு யான் எழுதி வைத்திருந்த சூளாமணி உரை முதற் சருக்கம் முடிய அவரிடங் கொடுத்துள்ளேன்" என்று தெரிவித்தனர். 21-12-48 கடிதத்தில் "சூளாமணி உரை எழுதித் தந்திருக்கிறார். அவர் பயன் படத் தக்கவர் என்பதில் தடையில்லை. இவரைக் கொண்டு பல வேலைகளைச் செய்வது இயலக் கூடியதொன்று. கூடியவரை நன்றாகவே எழுதியிருக்கிறார். அவரைத் திருவாளர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களை அணுகிப் பாடவேறுபாடு பெறச் சொல்லி யிருக்கிறேன். அது கிடைத்துவிடின் சூளாமணியைச் செம்மையாக முடித்து விடலாம்"

என்று குறிப்பிட்டனர்.

அங்ஙனமே உயர்திரு தெ. பொ. மீ. அவர்களிடமிருந்த பாடவேறுபாடு குறிக்கப் பெற்ற புத்தகத்தை வாங்கித் திரு இராமசாமிப் புலவர் முதல் 500 செய்யுள்கட்குப் பதவுரை மட்டும் எழுதிக் கொண்டுபோய் 24—3—1951 இல் புலவர் ஔவை யவர்களிடங் காட்டியபோதுதான் மிகுந்த கருத்து வேறுபாடு இருப்பதை அறிந்து தாம் இதுகாறும் எழுதியது பயனில் முயற்சியாய்ப் போய்விடுமோ என வருந்தி எழுதினர். அதனால் சூளாமணி புலவர் ஔவை யவர்கள் விளக்கத்தோடு வருதற்கு வாய்ப்பில்லாமற் போயிற்று.

இந்த நிலையில் திரு இராமசாமிப் புலவர் தமது ஊருக்கு அண்மையில் தம் இனத்தவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்

தில் பண்டிதமணி யவர்களிடம் தமிழ் பயின்று முதல் வகுப்பில் முதலாவதாகப் புலவர் பட்டம் பெற்றவருமான பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனுரை அறிமுகப் படுத்தித் தாம் எழுதி வைத்திருந்த பகுதிக்கு அவரைக் கொண்டு விளக்கவுரை எழுதச் செய்து கையெழுத்துப் படியை அனுப்பி வைத்தனர். அவ்வுரை மிகவுஞ் செவ்விதாக அமைந்திருப்பதைக் கண்டு மகிழ் வெய்தி நூல் முழுமைக்கும் உரை எழுதி முடிக்குமாறு தெரிவிக்கவே சூளாமணி உரையினை இரண்டு பகுதிகளாகக் கழகம் வெளியிட்டுள்ளது.

அதன்பின் பெருமழைப் புலவர்க்குத் தொடர்பாகச் சங்க இலக்கியங்கட்கு உரை எழுதும் பணி கொடுக்கப் பெற்றது. பத்துப்பாட்டுகட்கும் தனித்தனி விளக்கமும் ஆராய்ச்சியும் எழுதித் தந்தனர். பின்னர், புலவர் ஔவை துரைசாமிப் பிள்ளை யவர்கள் எழுதிய பதிற்றுப்பத்து உரை, புறநானூறு உரை நீங்கலாக ஏனைய ஆறு நூல்களுள் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரையோடு கூடிய நற்றிணைக்கும் நச்சினார்க்கினிய ருரையோடு கூடிய கலித்தொகைக்கும் விளக்கமும் ஆராய்ச்சி முன்னுரையும் வரைந்து தந்தனர். மற்றும் நெடுந்தொகை (அகநானூறு), குறுந்தொகை, பரிபாடல், ஐங்குறுநூறு ஆகிய நான்கிற்கும் பதவுரை விளக்கவுரை, ஆராய்ச்சி முன்னுரை எழுதினர். இம்முறையில் பத்துப்பாட்டு நூல்களும், எட்டுத் தொகை நூல்களும் கழக வெளியீடுகளாக வந்து தமிழுலகிற்குப் பெரும்பயன் தருகின்றன.

ஐம்பெருங்காப்பியம் ஐஞ்சிறு காப்பியங்களுள் நாககுமார காவியம் கிடைக்கப் பெறவில்லை. புலவர் ஔவை அவர்கள் யசோதர காவிய உரை கழகவழி வெளியிடப் பெற்றமை அறிவீர்கள். ஏனைய நூல்கள் யாவும் பெருமழைப் புலவர் உரை விளக்கத்தோடு கழகம் வெளியிட்டுத் தமிழுலகிற்கு வழங்கியுள்ளது. இவ்விரு பெரும்புலவர்களும் நக்கீரர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், முதலிய பழைய உரையாசிரியர்களோடு ஒப்பவைத்துப் போற்றத்தக்கவர் எனின் அது மிகையாகாது.

பெருமழைப் புலவர் தொடர்பு கழகத்துக்கு உரிய காலத்திலே கிடைக்கப் பெற்றது திருவருட் செயலே. அவர்களது தொடர்பு கிடைக்கப் பெருவிடில் கழகம் பழந்தமிழ் இலக்கண இலக்கியப் பேழையினை உருவாக்கியிருக்கமுடியாது என்பது வெள்ளிடைமலை.

இனி, புலவர் ஔவையவர்கள் கழக விழாக்களில் கலந்தும் செந்தமிழ்ச் செல்வி இதழாசிரியர் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்தும் ஆற்றிய பணிகளைப் பற்றி ஈண்டு எடுத்துக் கூறுவது வேண்டற்பாலதே.

சென்னையில் 22—4—44 இல் **சொல்லின் செல்வர் சேதுப் பிள்ளை** தலைமையில் நடைபெற்ற **புறநானூறு மாநாட்டில்** 'புறநானூறு காட்டும் தமிழ் நாகரிகம்' என்னுந் தலைப்பில் கட்டுரை எழுதி வழங்கிப் பேசியதும், நெல்லையில் 9—2—1952 இல் **டாக்டர் மு. வரதராசனுர்** தலைமையில் நடந்த **பத்துப்பாட்டு மாநாட்டில்** 'திருமுருகாற்றுப்படை' பற்றிக் கட்டுரை எழுதித் தந்து பேசியதும், நெல்லையிலே 12—2—1956 இல் நடைபெற்ற **பதினெண் கீழ்க்கணக்கு** மாநாட்டிற்குத் தலைமை யுரை எழுதி வழங்கித் தலைமை தாங்கிச் சிறப்பித்ததும் போற்றி மகிழ்தற்குரியன.

சென்னையில் 1961 ஆகஃச்டுத் திங்களில் வெளியிட்ட கழகத்தின் 1008ஆவது வெளியீட்டு விழா மலருக்கு எழுதிய 'திருவாமாத்தூர் யானை' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையும் 1968 இல் அக்டோபர்த் திங்களில் வெளியிட்ட திருவள்ளுவர் விழாமலருக்கு எழுதிய 'வள்ளுவர் காட்டும் சமயக் கருத்துக்கள்' என்ற கட்டுரையும், 'எத்தனை நூல் கற்றுலும், எப்பொருளை ஆய்ந்தாலும்' என்ற வெண்பாவும் 1970 திசம்பரில் வெளியிட்ட கழகப் பொன்விழா மலருக்கு எழுதிய 'கழகத் தமிழ்ப் பயிர்' என்ற கட்டுரையும் என்றும் நின்று நிலவுதற்குரியன.

நெல்லைச் சந்திப்புத் தருமபுர மடத்தில் 1952 மேத் திங்களில் 21 நாள்கள் தொடர்பாகச் சிவஞானபோத பாட வகுப்பு நடைபெற்றது. பாடம் நடத்தியவர் சாத்தூர் வழக்கறிஞரும் தமிழ்ப் புலவருமாகிய தூ. சு. கந்தசாமி முதலியார் எம். ஏ. அவர்களாவர். வகுப்பில் ஆசிரியர்களும் மாணவர்களுமாக நாற்பதின்மர் பாடங் கேட்டனர். காலையிற் பாடஞ் சொல்லுதலும், மாலையில் கேள்விகட்கு விடை சொல்லுதலும் இரவு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுதலுமாக நிகழ்ச்சி அமைக்கப் பெற்றிருந்தது. புலவர் ஔவையவர்கள் சிறப்புச் சொற்பொழிவுக்கு அழைக்கப் பெற்றிருந்தனர்.

சென்னையில் 25—12—1964 இல் உரைவேந்தர் ஔவை அவர்கள் தலைமையில் **காப்பிய நிறைவு விழா** மிகவுஞ் சிறப்

பாக நடைபெற்றது. அவ்விழாவிலே பெருமழைப் புலவர் எழுதிய ‘நீலகேசி உரை’ வெளியிடப் பெற்றது. தலைவரவர்களின் மதிப்புமிக்க மாணவி தமிழ்த் திருவாட்டி இராதா தியாகராசன் அம்மையார் ‘சிலப்பதிகாரம்’ பற்றி ஆற்றிய சொற்பொழிவினைக் கேட்டவர்கள் விழித்த கண் விழித்தபடியும் மடுத்தசெவி மடுத்தபடியும் தம்மை மறந்து சுவைத்தனர் என்றால் அது மிகையாகாது. ஆசிரியர் தலைமையில் அவர்தம் அருமை மாணவியார் இனிய பேச்சைக் கேட்க வேண்டுமென்று நீண்ட நாள்களாக எண்ணிய எனது எண்ணம் அன்று நிறைவெய்தி எனக்கு எல்லையில்லா இன்பம் நல்கியது. இங்கே தமிழறியாத மலையாளத் திருவாட்டியார் தம் ஆசிரியரிடம் தமிழ் பயின்ற முறையினை எடுத்து விளக்குவது இனிமை தருவதாகும். முதற்கண் தமிழ் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளச் செய்து பின் திருக்குறள் பரிமேலழகருரை நூலைக் கையிலே கொடுத்துப் படித்துப் பொருளுணருமாறும் அதன் வழியே பிற இலக்கியங்களைக் கற்குமாறும் தம் ஆசிரியர் செய்ததைக் கலைமகளும் திருமகளும் ஒருருக் கொண்டாற் போல் விளங்கும் அம்மையாரவர்கள் இயம்பக் கேட்டு வியந்தேன்; மகிழ்ந்தேன்.

1969 செப்டம்பர் முதல்நாள் மதுரைப் பல்கலைக் கழகம் 87 அகவை நிறைந்த இராவ்பகதூர் தணிகைமணி செங்கல்வராய பிள்ளை எம். ஏ. அவர்கட்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. அன்றிரவு மதுரைத் திருவள்ளுவர் கழகத்திலே உரைவேந்தர் ஒளவையவர்கள் தலைமை தாங்கிப் பாராட்டிப் பேசினார்கள். தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் டாக்டர் தணிகைமணி அவர்கட்கு மலர்மாலை அணிவித்துப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

1970 பிப்பிரவரியில் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் கழகத் ‘தமிழ்ப் பேரொளி’, ‘2000 ஆண்டுகட்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கண இலக்கியப் பேழை’ அறிமுக விழாவில் உரைவேந்தர் ஒளவை அவர்கள் பாராட்டுரை பகர்ந்தனர். அவர்தம் அருமை மாணவியார் செந்தமிழ்த் திருவாட்டி இராதா தியாகராசன் அவர்கள் சங்க இலக்கியங்களைப்பற்றி உரையாற்றித் தமது ஆட்சியின் கீழுள்ள கல்லூரிகள், பள்ளிகட்கு நான்கு பேழைகளை வாங்கி ஊக்குவித்தனர்.

கழகப் பொன் விழாவின் மொழி மாநாட்டிலே அந்நாள் சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு கா. கோவிந்தன் அவர்கள்

தலைமையில், நம் புலவரவர்கள் மனோன்மணிய நாடகப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பாராட்டுரை வழங்கினர். இங்கே மாணவர் தலைமையில் ஆசிரியர் பேசியது குறிப்பிடத்தக்கது. அன்று காலை விழாத் தொடக்கத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் புகழ்மிகு சீரிய துறைகளில் நூல்களெழுதிய கழக நூலாசிரியர் எழுவருள் ஒருவராக உரை வேந்தர் ஒளவை துரைசாமி அவர்கள் பரிசும் பாராட்டும் பெற்றனர்.

1971 பிப்பிரவரித் திங்களில் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கி. இலட்சுமிகாந்தன் பாரதியார் ஐ.ஏ.எஸ். தலைமையில் நடைபெற்ற கழகப் பொன் விழாவிலே உரைவேந்தர் ஒளவையவர்கள் பேராசிரியர் கா. சு. பிள்ளையவர்கள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினர்.

1972 இல் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற முப்பெரும் புலவர் விழாவில் உரைவேந்தர் அவர்கள் டாக்டர் தணிகைமணி அவர்கள் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்துப் பேசினர்.

தாம் பாடங் கேட்ட—பழகிய பெரும்புலவர்களைப் பற்றிச் செந்தமிழ்ச் செல்விக்கு எழுதி வருமாறும் திங்கடோறும் அதன் பொருட்டு ரூ. 25/ அனுப்புவதாகவும் புலவர் ஒளவை அவர்களை நேரிற் கண்டு சொல்லி வேண்டினேன். அதற்கு அவர்கள் 7—12—47 இல் எழுதிய கடிதம் வருமாறு:

> "யான் நேரில் தெரிவித்துக் கொண்டபடி இந்தத் திசம்பர் முதல் திங்கடோறும் ரூ 25/ அனுப்பியுதவ வேண்டுகிறேன். தமிழ்ப் பெருமக்கள் வரலாற்றினைத் தொடங்கி விட்டேன். கனகசபைப் பிள்ளை யவர்கள் வரலாறு கிடைத்திலது. உமாமகேசுரம் பிள்ளை, நாட்டார் இருவர் வரலாறு முடியும் நிலையிலுள்ளது. கா. சு. பிள்ளை அவர்கள் வரலாறு தொடங்குகிறேன்."

அக் கருத்து நிறைவேறாமையினால் 27—3—73 இல் மீண்டும் அதே கருத்தினை எழுதி வேண்டியுள்ளேன். சூன் திங்களிலிருந்து எழுதுவதாகத் தெரிவித்துள்ளனர்.

புலவர் ஒளவையவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பணியேற்பதற்கு முன் 21—6—43 இல் ஆரணியி

லிருந்து எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது அவர்கள் நன்றி யுணர்வினைக் காட்டுகின்றது.

> "அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து உத்தரவு இன்று வந்தது. இதற்குத் தோன்றாத் துணையாய் உள்ளிருந்து ஆவன புரிந்த அருளண்ணல் நம் அருமைப் பண்டித மணியவர்களே என்று நண்பர்களால் அறிய, அதற்கு உள்ளூறு துணைசெய்த தங்கள் நன்றியினை யான் சிறிதும் மறத்தற் கில்லேன்."

உரைவேந்தர் ஔவையவர்கள் மணிவிழா 1962, 63 இல் மதுரையில் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. யான் அதில் கலந்துகொள்ள வாய்ப்பில்லாது போயிற்று. எனவே, நெல்லையில் 1964 ஏப்பிரல் 12 ஆம் நாள் ஆறுவது சிற்றிலக்கிய மாநாட்டையொட்டி உரைவேந்தர் அவர்கள் மணிவிழாவைச் சிறப்பாக நடத்தத் திட்டம் வகுத்து அழைப்பிதழ் அனுப்பப் பெற்றது. முதல்நாளே நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு சந்திர சேகரன் அவர்களைக் கண்டு புலவரவர்கட்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துமாறும், மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி திருவாளர் கே. ஆர். மாணிக்கம் அவர்களைக் கண்டு பொற்கிழி வழங்குமாறும் வேண்டிப் புலவரவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைக் கொடுத்து வந்தேன்.

விழாவன்று காலை 5 மணிக்குச் சென்னையில் என் இளைய மைத்துனர் மனைவியும் என் அருமைத் தங்கையுமாகிய கோமதி யம்மை அறுவை மருத்துவத்தால் ஏற்பட்ட கோளாறினால் இறையடி சேர்ந்த துன்பச் செய்தி கிடைத்தது. உடனே, யானும், என் இளைய மருகரும் மறைமலையடிகள் நூல் நிலைய நூலகருமாகிய திரு முத்துக்குமாரசாமியும் சென்னைக்குப் புறப் பட்டுச் செல்லவேண்டியதாயிற்று. அன்று பிற்பகல் நடை பெறும் உரைவேந்தர் மணிவிழா நிகழ்ச்சியிற் கலந்து மகிழ இயலாமையான நிலை எல்லையற்ற பெருந்துன்பத்தை விளை வித்தது. வழி நெடுகிலும் அருமைத் தங்கையின் பிரிவுத் துயரமும், மணிவிழாவில் தொடர்புகொள்ள முடியாத குறையும் நெஞ்சத்தையும் உடலையும் வாட்டின. எல்லாம் இறைசெய லெனக் கருதி விழா மிகவுஞ் சிறப்பாக நடைபெறுக! புலவ ரவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! அவர்கள் தமிழ்த் தொண்டும் சிவத்தொண்டும் மேன்மேலும் சிறப்புற்றோங்குக! என உள்ளத்தே வாழ்த்தி அமைதியுறலானேன்.

விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றதனையும் யான் உட னிருக்க வியலாமை நேர்ந்த துன்பியல் நிகழ்ச்சியினையும் குறிப் பிட்டு உரைவேந்தரவர்கள் 14-4-64 இல் மதுரையிலிருந்து

எழுதிய கடிதம் அவர்கள் என்பால் வைத்திருந்த மெய்யான ஆருயிரன்பினை வெளிப்படுத்தி எனக்கொருபால் ஆறுதலும் மற்றொருபால் துன்பமும் விளைத்தன என்பது வாய்மையாகும். அக்கடிதம் வருமாறு :

"நெல்லையிலிருந்து நேற்று நண்பகல் இங்கு வந்து சேர்ந்தேன். மணிவிழாச் சிறப்பு இனிது நடைபெற்றது. நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்திரசேகரன் அவர்கள் கழகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்; கல்வித்துறை ஆய்வாளர் (Divisional Inspector) திரு கே. ஆர். மாணிக்கம் அவர்கள் தங்கள் உள்ளன்பின் உருவாய பொற்கிழி வழங்கிப் புகழ் புரிந்தார். சைவத்திரு மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள் பாராட்டு மலரைப் படித்தளித்தார். பேராசிரியர் அருளப்பன் திரு நவநீதகிருட்டிணன் முதலியோர் பாராட்டியுரைத்தனர். எல்லாம் மிக்க சிறப்புடன் நடைபெற்றன. எனினும், நீங்கள் இல்லாமை எனக்குப் பெருங் குறையாக இருந்தது. எதிர்பாராத வகையில் நிகழ்ந்த இன்னாமை காரணமாக நீங்கள் இல்லாமை நேர்ந்தது எனது தவக்குறை.

"கால வேற்றுமையால் கருத்து வேற்றுமை தோன்றுவது இயல்பு; எனினும், உள்ளத்தில் தோய்ந்து ஊடுருவி நிற்கும் உண்மையன்பு ஒருவாற்றானும் மாறாது என்னும் உயரிய உண்மை உங்கள்பால் ஒளிவிட்டுத் திகழ்வது காண என்மனம் நீராய் உருகி விட்டது. செந்தமிழ்ப் பெருந்தொண்டும் சீர்த்த மனப்பண்பும் உருக்கொண்டாற் போல் விளங்கும் உங்களது தூய அன்பு நினைக் குந்தோறும் எனக்குப் பெரியதோர் இறும்பூது நல்குகின்றது. அதனால் என் உள்ளத்திற் பிறந்த நன்றியுணர்வு என்னுயிரோடே கிடந்து பின்னிப் பிணைந்து நிற்கிறது. பெருகிவரும் அன்பினால் என் புன்மை தோய்ந்த உள்ளம் புகழ்ந்து வாழ்த்துகின்றது உங்களை; ஆனால், புணையின் புல்லென்றது ஈர்த்துப் பிடித்து ஆட்கொள்ளும். இன்பச் செயலன்றோ இம்மணிவிழாப் பாராட்டும். இனி எற்றைக் கும் உங்கள் இன்ப அன்புறவில் இருந்து மகிழ்வேன்.

"அன்று உங்கள் அருமையண்ணலின் அன்பிற் பிணிப்புற்ற என் தமிழறிவு உங்களது உயரிய தூய நட்பால் சிறந்து நீங்கள் அன்பு கனிந்து பாராட்டுமளவை அடைந்தமைக்குக் காரணம் நீங்களே என்பதையும் நான் மறவேன்; மறந்தால் கெடுவேன் என்பதையும் நான் நன்கறிவேன். செந்தமிழ்த்தாயின் திருவரு ளால் உங்கள் பணி சிறந்து மேன்மேலும் உயர்வதாக. தமிழறிஞர் கட்கு வாழ்வளிக்கும் உங்கள் உள்ளம் பனிபடு இமைய மால்வரை யினும் பெரிது; நிலத்தினும் பெரிது; நீரினும் ஆரளவின்று. அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயண்ணல் திருவரு ளால், அவனது அருள்போல் பெருகிய வையை மணலினும் பல்லாண்டு வாழ்க."

இக்கடிதத்தினால் யான் கள்ளங் கவடின்றிப் பெரும் புலவ ரவர்களின் அறிவாற்றல்களில் தோய்ந்திருக்கின்றமையும், புலவரவர்கள் என்னன்பிலும் பண்பிலும் பிணிப்புண்டிருக்கின்ற மையும் தெள்ளத்தெளிய விளங்குகின்றனவன்றோ!

புலவர் ஔவையவர்கள் எழுதிய 'சைவ சமய இலக்கிய வரலாறு' வரலாற்று நூல் வரிசையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப் பெற்றுள்ளது. பழைய உரையோடு கூடிய ஞானாமிர்தம்' என்னும் சைவ சமய நூலைப் பல ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து விளக்கக் குறிப்பு எழுதியுள்ளார். அதுவும் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாகப் பதிக்கப் பெற்றுள்ளது.

புலவரவர்கள் ஏட்டுச் சுவடிகளைப் படிப்பதிலும், கல்வெட்டுகளை ஆராய்வதிலும் பயிற்சி பெற்றுள்ளார். எதனையும் விரைந்து கற்றுத் தெளிவு பெறும் ஆற்றலும், கற்றுத் தெளிவு பெற்றதை விரைந்து எழுதும் வல்லமையும் கைவரப் பெற்றவர். அவர் கையெழுத்து ஒரே போக்காக அச்சுக் கோப்பவர்க்கு மயக்கம் ஏற்படாவகையில் அமைந்திருக்கும். சிவஞானபோதம் சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய மெய்கண்ட சாத்திர நூல்களைத் திருமடங்களிலும் சைவப் பேரவைகளிலும் முறையாகப் பாடஞ் சொல்லி வந்ததுண்டு.

பல மன்றங்கள், பள்ளி கல்லூரிகள், திருக்கோயில் விழாக்கள் முதலியவற்றில் பல பொருள்களைப் பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளனர். செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், தமிழ்ப் பொழில், தமிழ்ப் பாவைபோன்ற இதழ்கட்கும், பலவகை மலர்கட்கும் கட்டுரைகள் வரைந்துள்ளனர். சிலர் நூல்களை எழுதும் திறன்மிக்கவராயினும், மேடைகளில் பேசும் திறமையற்றவர்களாகக் காணப் பெறுகின்றனர். ஆனல், நம் ஔவைப் புலவரவர்களோ நூலெழுதும் ஆற்றலோடு கேட்டார்ப் பிணிக்குந் தகையவராய்ப் பேசுந் திறலாளர் ஆவர்.

திண்டிவனத்தருகில் "ஔவையார் குப்பம்" என்னுஞ் சிற்றூரில் இனிது வாழ்ந்த திரு சுந்தரம் பிள்ளையவர்கட்கும் திருவாட்டி சந்திர மதியம்மையார்க்கும், தமக்கை பூமா தேவியோடு இரட்டையராகப் பிறந்த புலவர் துரைசாமி அவர்கள் தமக்கையைக் குழந்தைப் பருவத்திலேயே இழந்து அண்ணன்மார் மூவரோடு வாழ்ந்து வரலாயினர். ஔவையார் குப்பத்தில் பிறந்தமையால் 'ஔவை சு. துரைசாமி' எனக் கையெழுத்திட்டுக் கடிதம் எழுதிவந்தவர் 1947 முதல் 'ஔவை துரைசாமி' என்றே கையெழுத்திடுவாராயினர். 'ஔவை' என்று கையெழுத்திட்ட ஓரிருகடிதங்களுமுள. நாடகக் கலைஞர் தி. க. சண்முகம் **ஔவையார் நாடகத்தில்** ஔவையாராகவே யாவரும் வியக்கும் வகையில் நடித்தமையால் 'ஔவை தி. க. சண்முகம்' என்றும், 'ஔவை சண்முகம்' என்றும் அழைக்கப்

பெற்றனர். இந்த வேறுபாடு யாவரும் அறிதல் வேண்டு மென்பதற்காகவே ஈண்டு விளக்கப் பெற்றது. இவ்விரு பேரறிஞரும் தங்கள் இல்லங்கட்கு 'ஔவையகம்' என்றே பெயர் சூட்டியிருக்கின்றனர். 'ஔவை' என்ற தமிழ் மூதாட்டியார் திருப்பெயரைச் சூட்டிக் கொள்வதற்கு இவ்விருவரும் பெருந்தகுதியுடையவர் என்பது உலகம் ஒப்பக் கூடியதே.

மாண்பமைந்த புலவர்பெருமானுக்கு அறிவறிந்த ஆண் மக்கள் ஐவரும் பெண்மக்கள் நால்வரும் உளர். மூத்த திருமகனர் திரு. ஔவை. து. நடராசனர் 'தந்தையை ஒப்பர் மக்கள்' என்னும் முதுமொழிக்கு இலக்கியமாக விளங்கு கிறார். எம்.ஏ., எம்.லிட். பட்டங்கள் பெற்று உயர்திரு வள்ளல் மகாலிங்கம் அவர்களின் இராமலிங்கர் பணிமனையில் தொண்டு புரிந்து வருகின்றார். பட்டி மன்றங்கள் இவரால் கிளர்ச்சியும் பெருமையும் அடைகின்றன. எனவே, இவர் 'பட்டி மன்ற மன்னர்' என அழைக்கப் பெறுகின்றனர். ஔவை து. நடராசன் தந் தந்தையாரைப் போல 'ஔவை நடராசன்' என்றே கையெழுத்திடுகின்றனர்.

புலவரவர்களின் மகளிர் நால்வர்க்குக் கணவன்மார் கல்லூரிப் பட்டம் பெற்றவர்களாவர். கடைசித் திருமகள் செல்வி தமிழரசியாரின் கணவனர் திரு. குமரவேல் அவர்கள் அண்மையில் 'நாடகக் கலை' பற்றி ஆய்வுரை எழுதி டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர்.

இங்கே என் மூத்த மகள் செல்வி தமிழரசியைப் பற்றிப் புலவரவர்கள் எழுதுங் கடிதங்களில் குறிப்பிடுவதை விளக்கிக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவள் மூன்றாண்டுப் பசுங் குழந்தையாயிருந்தபோது என் இல்லத்துக்கு வரும் புலவர் பெருமக்களோடு மிகவுங் குழைவாகப் பழகுவாள். விருந்துண் ணும்போது உண் பொருள்களைத் தானே எடுத்து வந்து படைப்பாள். 'சாதம்' என்று சொன்னால் காலணா தண்டம் 'சோறு' என்று சொல்லுங்கள் என்பாள். இப்படியே சலம், ரசம் முதலிய வடசொற்களைச் சொன்னால் தண்டம் விதித்துத் 'தண்ணீர்' 'மிளகுநீர்' முதலிய தூய தமிழ்ச் சொற்களைச் சொல்லிக் காட்டுவள். இப்படியெல்லாம் அவள் பேசுதலைக் கேட்டுப் புலவர்களெல்லாம் அவளிடம் மிக்க அன்பு காட்டி வருவர்.

நம் புலவர் ஔவையவர்கள் 1943, 1944 இல் எழுதிய பெரும்பான்மையான கடிதங்களில் தமிழரசியின் நலம் உசாவி வரைதலுண்டு. ஒருசில தொடர்களை மட்டுங் காண்க.

"தமிழரசியின் நலத்தைத் தெரிவிக்க மறந்து போகிறீர்கள். ஒருவரி எழுதுவது கடினமா?

"சென்னையிலிருந்து கடிதம் வரும் போதெல்லாம் தமிழரசியின் கனிந்த முகமும், இனிய சொல்லும், மெல்லிய நடையும் நினைவுக்கு வருகின்றனவே! மறவாமல் எழுதுங்கள்."

"தமிழரசிக்கு என் மனங்கனிந் தெழும் அன்பும் வாழ்த்தும் அனைத்தும் தெரிவிக்கவும்."

"தமிழரசிக்கு என்மனையிலும் ஒரு தமிழரசி தோன்றி வளர்கின்றாள் என்று தெரிவியுங்கள். தமிழும் தமிழரசியரும் இனிது வாழ்க"

இவர்களிடம் தமிழ் பயின்று புலமை பெற்ற செந்தமிழ்த் திருவாட்டி இராதா தியாகராசன் அவர்கள் இவர்க்கு 'உரை வேந்தர்' என்ற சிறப்புப் பெயரும், தூத்துக்குடி சைவசித்தாந்த சபையார் 'சித்தாந்த கலாநிதி' (சித்தாந்தக் கலைக்கடல்) என்னும் பட்டமும் வழங்கிப் பாராட்டினர். இவரை 'நாவேந்தர்' எனவும் 'தமிழ்க் கலைக்கடல்' எனவும் அழைக்க என் மனம் அவாவுகின்றது.

கழகப்பதிப்புப் புறநானூறு இரண்டாம் பகுதி முன்னுரையில் புலவரவர்கள் மனம் நொந்து எழுதியது பின்வருமாறு :

"பாழான இந்தப் பழந்தமிழ் ஏடுகளைத் தேடித் திரிந்து ஆராய்ந்து கழித்த உங்கள் காலத்தை 'பி.ஓ.எல்.,' 'எம்.ஓ.எல்.' என்ற பட்டங்களைப் பெறுவதற்குக் கழித்திருந்தால் உங்களது வாழ்க்கை பொருள் நிலையில் மிக்க சிறப்புற்றிருக்கும் என என் நண்பரொருவர் என் சங்கநூல் வெளியீடுகளை நோக்கி என்பால் கொண்ட உண்மை யன்பினால் கழறிக் கூறினார்".

பள்ளி இறுதி வரை பயின்ற ஆசிரியர்களுள் ஒரு சிலர் 'பி. ஓ. எல்.,' 'எம். ஓ. எல்.', 'டாக்டர்' பட்டங்களைப் பெற்று இவர்தம் கண் முன்னால் உயர்ந்த பதவிகளில் இருப்பது உண்மையே. ஆனால், நம் புலவரவர்களோ எத்தனையோ மாணவர்களை அவ்வுயரிய பட்டங்களைப் பெறச்செய்த பெருமைக்குரியராவர். அப் பட்டங்களைப் பெறத் தாம் விரும்பியிருப்பின் இவர்கள் எளிதிலே பெறுவர் என்பது திண்ணம்.

கழகம் புத்தகம் வெளியிடுவது பற்றியும் இங்கே ஒன்று கூறவிரும்புகிறேன். கழகம் இலக்கிய வெளியீடுகளை மட்டுமே வெளியிட்டிருக்குமாயின் பொருள் நிலையில் வளர்ச்சியுற்றிருக்காது. இத்துணை காலம் கழகம் வாழ்ந்திருக்கவுமாட்டாது.

பள்ளிப் பாடநூல்கள் சிலவற்றை வெளியிட்டமையினுலே தான் இலக்கிய நூல்களைத் தொடர்ந்து வெளியிடமுடிந்தது. பள்ளிகட்கு வினுவிடை நூல்களையோ, பொதுமக்களுக்குச் சிற்றின்பச் சுவை தரும் புதினங்களையோ கதைகளையோ கழகம் பொருள் நிலை கருதி வெளியிடவிரும்பவில்லை என்பது அறிதற்பாலது.

புலவர் ஔவையவர்கள் தம் குடும்பத்தில் ஏற்படும் துன்பியல் நிகழ்ச்சிகளைப்பற்றி அவ்வப்போது எனக்குக் கடிதம் எழுதி ஆறுதல் பெறுவதுண்டு. 1948 தொடக்கத்தில் தம் மனத்திற்கினிய மனைக்கிழத்தியார் உள நோயால் பீடிக்கப் பெற்றுத் தாம் பேதுற்ற நிலையிலிருப்பதை எழுதித் தெரிவித்தனர். பின்னர் ஏப்பிரலில் பெங்களூரிலுள்ள மருத்துவ மனையில் தம் மனைவியாரைச் சேர்த்து மருத்துவஞ் செய்விப்பதாகவும் அதனுல் நலம் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாகவும் எழுதினர். அதன்பின் முழுநலம் ஏற்பட்டு அண்ணுமலை நகருக்கு அழைத்து வந்துவிட்டதாகவும் தெரிவிக்கவே யான் பெருமகிழ்ச்சியுற்றேன். தில்லையம்பலவாணர் திருவருளால் அவர்கள் குடும்பத்துக்குஏற்பட்ட பேரிடர்நீங்கிச் சீர்மிகு நல்வாழ்வு பெருகலாயிற்று.

இராவ்பகதூர் தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள், எம். ஏ., பன்னிரு திருமுறைகளுள் ஒன்பது திருமுறைகட்கு ஒளிநெறியும் ஒளிநெறிக் கட்டுரைகளும் எழுதிய அரும்பெரும் பணியினை உலகறியும்பொருட்டு யான் தமிழகக் கல்வியமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியனவர்களிடம் திரு. தணிகைமணியவர்கட்கு மதுரைப் பல்கலைக் கழகவழி டாக்டர் பட்டம் வழங்குமாறு வேண்டினேன். ஒரு முறை அவர்களைத் திருத் தணிகைமணியவர்கள் இல்லத்துக்கு அழைத்துப் போய் அவர்கள் செய்துவரும் ஒப்பில் பெரும் பணிகளைக் காட்டினேன். 87 அகவை நிரம்பிய திரு. பிள்ளையவர்கள் செய்துவரும் பணிகளைப் பெரிதும் பாராட்டி யான் வேண்டியவாறே 1969 செப்டம்பர் முதல் நாள் மதுரைப் பல்கலைக்கழகவழி டாக்டர் பட்டம் வழங்கும்படி செய்தமையினைத் தமிழ் மக்கள் பெரிதும் போற்றிப் புகழ்கின்றனர்.

அதேபோல் பழைய உரையாசிரியர்களோடு ஒப்ப வைத்துப் போற்றத்தக்க இரு பெரும் புலவர்கள் உரைவேந்தர் ஔவை சு. துரைசாமி யவர்கட்கும், பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனு ரவர்கட்கும் தமிழகப் பல்கலைக் கழகங்களில் ஏதாவதொன்றின்வழி டாக்டர் பட்டம் வழங்குதற்கு உரிய ஏற்பாட்டினைச் செய்துதவும்படி மாண்புமிகு கல்வியமைச்சரவர்களை வேண்டினேன். அவர்கள் தெரிவித்தபடி இருவர்

வரலாறுகளையும் எழுதிப் படங்களுடன் 20-9-1970இல் அனுப்பி வைத்தேன். அதன் பின்னர் யான் செய்த முயற்சி கைகூடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால், பெருமழைப் புலவ ரவர்கள் கடுமையான நோய்க்காளாகி 1972 சனவரியில் இறையடி சேர்ந்தனர். எனினும், உரைவேந்தரவர்கட்கு டாக்டர் பட்டம் கிடைக்கப் பெறுதல் வேண்டுமென்பது எனது பேரவா. இறைவன் எனது நல்லெண்ணத்தை நிறைவு செய் தருள்வானாக!

இப்போது சென்னை வானொலியில் காலையிலே அறிஞர்கள் 'குறளமுதம்' பற்றிப் பேசுவது கேட்கப்படுகின்றது. 1968இல் திருச்சி வானொலியில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், உரைவேந்தர் ஔவை, சரவண ஆறுமுக முதலியார், திருக் குறளார் வி. முனிசாமி ஆகிய நால்வர் நிகழ்த்திய 'குறளமுதம்' கேட்டோம். அப்பேச்சுக்களனைத்தையுந் தொகுத்து, நூல் வடிவில் 'வள்ளுவர் உலகம்' என்ற தலைப்பில் செந்தமிழ்த் திரு வாட்டி இரகுபதி சுவாமிநாதன், எம். ஏ. 1969இல் வெளியிட் டுள்ளார்.

திருக்குறள் முப்பாலுக்குமே உரைவேந்தரவர்கள் மிகு விரிவான உரை எழுதவேண்டுமென்ற அவா எனக்கு உண்டு. நாகை. சொ. தண்டபாணிபிள்ளையவர்கள் அறத்துப்பாலுக்கு மட்டும் விரிவுரை எழுதினார்கள். அதனைப் போற்றுதார் இல்லை. பொருள், இன்பங்கட்கு உரை எழுதாத நிலையில் கூற்றுவன் அவர்கள் ஆருயிரைக் கவர்ந்தனன். 'திருக்குறள் அறம் நாகை தண்டபாணி விருத்தியுரை' எனப் பாராட்டப் பெறுகின்றது. அதையொத்த விரிவுரை மற்ற இரண்டு பால்கட்கும் எழுதப் பெறுதல் வேண்டுமென்று குறள் அன்பர்கள் விரும்புகிறபடி எழுதக்கூடிய தகுதியுடையவர்கள் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள், சைவசமய இலக்கியங்கள் பலவற்றையும் ஐயமறத் தெளிவுறக் கற்ற நம் ஔவையவர்களே ஆவார்.

இத்தகைய பேராற்றலுடைய உரைவேந்தரவர்கள் எழுதிய 'தெய்வப் புலவர் திருவள்ளுவர்' என்ற அரிய நூலைக் கழகம் வெளியிட்டுப் புகழடைந்தது எனின் அது மிகையன்று. உரை வேந்தர் ஔவையவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க வென இறைவனை வேண்டுவோம்.

அடுத்த கட்டுரையில் 'திருவள்ளுவரும் சிவப்பிரகாசரும்', 'வள்ளுவர் சொல்லமுதம்', 'குறள் கூறும் சட்டநெறி' முதலிய நூல்களைப் பற்றி விளக்கப்பெறும்.

(தொடரும்)

—வ. சு.

இறைமையில் இசைந்த வாழ்வு

[திரு. மா. சண்முகசுப்பிரமணியம்]

இறையுணர்வும் அறவாழ்வும்

(முன் இதழ் ௩௯௯ ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுக்கமும் அறமும்

பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல் நாம் நடப்பதே ஒழுக்கம் என்றும், உலகத்தோடு ஒட்ட ஒழுகும் அப்பண்பினை இறையுணர்வால் நாம் எளிதில் எய்துகிறோம் என்றும் கண்டோம்.

பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல் நடப்பது ஒரு வகை; பிறர் இன்பத்திற்கு உகந்த முறையில் நடப்பது மற்றொரு வகை. முன்னதை ஒழுக்கம் என்கிறோம், பின்னதை அறம் என்கிறோம். மற்றவர்களுக்குத் துன்பந் தரும் செயல்களைச் செய்வது கூடாது என்று தடுக்கிறது, ஒழுக்கம். மற்றவர்களுக்கு இன்பந் தரும் செயல்களைச் செய்ய வேண்டும் என்று கூறுகின்றது, அறம்.

தீயசொற்கள் பிறருக்குத் துன்பம் விளைவிக்கின்றன. எனவே, வாய் தவறிக்கூட தீச்சொற்களைக் கூறுதல் கூடாது என்கிறது, ஒழுக்க நெறி.

> "ஒழுக்க முடையார்க்கு ஒல்லாவே தீய
> வழுக்கியும் வாயாற் சொலல்" —குறள் 139.

இனிமையான சொற்களால் பிறருக்கு இன்பம் விளைகிறது; ஆதலால், முகமலர்ந்து இனிமையாகப் பார்த்து இன்சொற்களைக் கூறுதல் வேண்டும் என்கிறது, அறநெறி.

> "முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானும்
> இன்சொ லினதே அறம். —குறள் 93.

இவ்வாறு, துன்பத்தை விலக்குவது ஒழுக்கம் ஆகின்றது, இன்பத்தைச் சேர்ப்பது அறம் ஆகின்றது.

அறத்தின் நோக்கம் சமுதாய இன்பம் :

ஒருவன் செய்யும் அறச்செயல்களால் பிறருடைய இன்பம் பெருகுகிறது. இன்பத்தைப் பெறும் பிறர் அறச்செயல்களைச் செய்தோரைப் போற்றிப் புகழுகின்றனர். ஈகை என்பது

அறம். அந்த ஈதலால் நன்மையடைந்தவர்கள் தமக்கு ஈந்தவர்களைப் போற்றுகின்றனர், புகழுகின்றனர். எனவே, அறத்தால் தோன்றும் இன்பம் புகழோடு சேர்ந்த இன்பமாகின்றது.

"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல" —குறள் 39.

புகழோ பழியோ ஒருவனுக்கு வருவது அவன் வாழும் சமுதாயத்திலுள்ள மற்றவர்களின் எண்ணத்தைப் பொறுத்ததேயாகும். சமுதாயத்தில் ஒருவன் எவ்வாறு கருதப்படுகின்றனோ அதை வைத்துத்தான் அவன் புகழுடையவனா அல்லனா என்பதை நாம் மதிப்பிடுகின்றோம். எனவே, அறத்தால் விளைவது புகழோடு சேர்ந்த இன்பம் என்றால் அது சமுதாயம் போற்றும் இன்பம் அல்லது சமுதாய இன்பம் என்பதேயாகும்.

சமுதாய இன்பத்தையே வள்ளுவர் 'அறம்' என்று கூறுகின்றார். எந்தெந்தப் பண்புகள் சமுதாய மக்களின் இன்ப வாழ்விற்கு, சமுதாய இன்பத்திற்கு உகந்தவையோ அவற்றையெல்லாம் அறம் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

'முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானும் இன்சொ லினதே அறம்' (குறள் 93). 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' (குறள் 49). 'திறனறிந்து சொல்லும் சொல் வன்மையும் அறம்' (குறள் 644). 'நல்லவை நாடி இனிய சொலின் அல்லவை தேயும், அறம் பெருகும்' (குறள் 96).—இவ்வாறு, இன்சொல்லும் இல்வாழ்க்கையும், நாவன்மையும் நல்லவை நாடலும் அறச்செயல்கள் ஆகின்றன.

ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் அனைவரும் பிறர் இன்பம் பேணும் பண்புடன் நடந்தால்தான் அது சீரடைந்த சமுதாயமாக விளங்கும். எனவே, இன்பமான சமுதாய வாழ்விற்கு இன்றியமையாததாக 'அறம்' அமைந்துள்ளது.

இத்தகைய அறச்செயல்களை நாம் இயன்றபோதெல்லாம் ஓயாது செய்துகொண்டே யிருக்க வேண்டும் என்கிறது, குறள் நெறி.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்" —குறள் 33.

பிறருக்கு இன்பம் பயக்கும் அறச்செயல்களை இயன்றவாறெல்லாம் இடைவிடாது நாம் செய்ய வேண்டுமாயின், அதற்கு எத்தகைய பண்பு நம்மிடம் வேண்டும்?

அன்பும் அறமும்

எவர்மீது நமக்கு அன்பு இருக்கின்றதோ அவர் இன்பத்தை நாம் நாடுகின்றோம். நம் அன்புக்குரிய பிள்ளைகள், உற்றார் உறவினர் இவர்கள் இன்பத்திற்கு உகந்த செயல்களை நாம் இயன்றவாறெல்லாம் செய்கின்றோம். சமுதாயத்திலுள்ள அனைவர் இன்பத்திற்கும் உகந்த செயல்களை நாம் செய்ய வேண்டுமெனில் நமக்கு அவர்கள் அனைவர்மீதும் அன்பு வேண்டும். உலகளாவும் அன்புணர்வு நம் உள்ளத்தில் இல்லையெனில் அறவுணர்வு எழுவதற்கு வழியில்லை.

"அன்பிலார் சிந்தை அறம் அறியாரே"　　—திருமந்திரம் 267.

என்பது முதுமொழி.

இறையுணர்வும் அன்புணர்வும் ஒன்றே என்று முன்னர்க் கண்டோம். எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் உறைந்துள்ள இறைமையே நம்முள்ளும் உறைந்துள்ளது. எனவே, எல்லா உயிர்களோடும் நாம் இறைமையால் இணைக்கப் பட்டுள்ளோம். இறைமை இணைப்பு என்ற இந்த உண்மையை உணர்ந்தால் நமக்கும் பிற உயிர்களுக்கும் உள்ள உறவு எளிதில் புலனாகின்றது. இந்த உறவுணர்வால் எழுவதே அன்புணர்வு.

அன்புணர்வு என்ற இந்த உறவுணர்வால் அரியதோர் ஆற்றலை நாம் பெறுகின்றோம். பிறர் இன்பத்தை நம் இன்பமாகவும், பிறர் துன்பத்தை நம் துன்பமாகவும் உணர்ந்து நடக்கும் ஒப்பற்ற இயல்பினை நாம் எய்துகின்றோம். உயிர்களனைத்தோடும் உறவுடையோம் என்ற உண்மையுணர்வால் எழும் அன்புணர்வு பிறர் இன்பத்தையும் துன்பத்தையும் நம் இன்பமாகவும் துன்பமாகவும் ஆக்கிவிடுகின்றது! எனவே, நம் இன்பத்தைப் பேணுவதுபோல் பிறர் இன்பத்தைப் பேணுகின்றோம். நம் துன்பத்தினைத் தவிர்ப்பது போல் பிறர் துன்பத்தையும் தவிர்க்க முயலுகின்றோம். இவ்வாறு தவிர்க்கும் முயற்சியில் எத்தகைய இடர்ப்பாடுகளையும் எதிர்த்து வீரத்துடன் செயல் புரிகின்றோம். ஆதலால், அன்பு என்ற பண்பு அறத்திற்குத் துணையாக இருப்பதுபோல் வீரத்திற்கும் துணையாக இருக்கிறது என்கின்றனர் :

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"　　—குறள் 76

இறையுணர்வும் அறவுணர்வும்

இவ்வாறு, அறவுணர்வுக்கு அடிப்படையான அன்புணர்வு உயிர்களிடையேயுள்ள உறவினை உணர்த்தும் இறையுணர்வி லிருந்தே எழுகின்றது. ஆதலால், இறையுணர்வே அறவுணர் வுக்கு ஆதாரமாகின்றது. அறவுணர்வுக்கு அடிப்படையாக இறையுணர்வு இலங்குவதால்தான் இறைமையை அறக்கடலாக, ''அறவாழி அந்தணனை''க் கண்டு போற்றுகின்றனர்; ''அறம் பழுக்கும் தருவாக'' ஏத்துகின்றனர்.

இறைமை உணர்வு இல்லாதவர்கள், தாம் வேறு பிறர் வேறு என்று பிரித்துக் காணுகின்றனர். தம் இன்பம் வேறு, பிறர் இன்பம் வேறு என்று எண்ணுகின்றனர். இது நம் மனத்திலே உள்ள குற்றம். தாம் வேறு பிறர் வேறு, தம் இன்பம் வேறு பிறர் இன்பம் வேறு என்ற அறியாமை நம் மனத்திலிருந்து நீங்கினுல்தான் பிறர் இன்பம் பேணும் செயல் களைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எழுவதற்கு ஏதுவாகும். அப்பொழுது, அறவுணர்வு தானுக எழுகின்றது நம் உள்ளத் தில். மனத்திலே உள்ள இந்த அறியாமை என்ற மாசு அகன்றுவிட்டால் அதுவே அறமாகிவிடுகின்றது.

> *''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்*
> *ஆகுல நீர பிற''*
>
> —குறள் 34.

இறைமை இணைப்பால் சமுதாய மக்களனைவரும் நாமும் உறவுடையோம், ஒன்றுவோம் என்ற உண்மையினை உணர்ந்த வுடன் பிறர் இன்பம் நம் இன்பம் ஆகின்றது. நம் இன்பத் திற்கு உகந்த காரியங்களை நாம் நாடுவதுபோல் பிறர் இன்பத் திற்கு ஏற்ற செயல்களையும் நாம் ஆர்வத்துடன் செய்கின்றோம். இதனுல் சமுதாய இன்பம் பெருகுகின்றது. இதுவே அறவாழ்வு ஆகின்றது.

தன் உடல் நோய் தீர்ந்தவுடன் ஒருவன் வைத்தியரை நன்றியுடன் பார்த்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றானே, அதைவிட இன்பம் வைத்தியருக்கு வேறு ஏது? ஒருவருக்கு வந்த துன்பத்தை நாம் போக்குகிறோம். துன்பம் நீங்கிய அவர் நன்றிப்பெருக்கோடு நம்மைப் பார்க்கின்றாரே, அப் பொழுது நாம் அடையும் இன்பத்தைவிடச் சிறந்த இன்பம் வேறில்லை. அதிலும், நமக்குத் துன்பம் நேர்ந்தாலும் பிறருக்கு இன்பம் விளைய வேண்டும் என்ற நோக்குடன், நமக்கு வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு, நாம் ஆற்றும் உதவியால் பிறர் அடையும் இன்பத்தை நாம் காணும்பொழுது நாம்

பேருவகை எய்துகிறோம். அப்பொழுது நாம் ஏற்றுக்கொண்ட துன்பம் இன்பமாகவே நமக்குத் தோன்றுகிறது. இவ்வாறு, துன்பத்தையும் இன்பமாக மாற்றும் ஆற்றல் தன்னலங்கருதாத அன்புணர்விற்கு, அறவுணர்விற்குத்தான் உள்ளது.

பிறர் நலனுக்கு எது வேண்டும் என்று அறிந்து அதைச் செய்பவர்கள்தாம் உண்மையில் உயிர் வாழ்வோர்கள், இல்லாவிடில் அவர்கள் வாழாது இறந்தவர்களுக்கு ஒப்பானவர்கள் என்கிறது, அறநூல் :

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்" —குறள் 214.

பிறர் இன்பமே நம் இன்பம் என்ற உண்மையை நாம் உணராததால்தான் பிறர் நலங்கண்டு நாம் பொருமைப்படுகின்றோம். பிறர் இன்பங்கண்டு பொருத தன்மையினை அழுக்காறு என்பார்கள். நம்மில் பெரும்பாலர்க்குத் தீய குணங்கள் ஏதுமே இல்லாது இருக்கலாம். ஆனால், இந்த அழுக்காறு என்ற உணர்வு நம் இதயத்திலே எவ்வாறோ தோன்றிவிடுகின்றது. இதன் காரணமாக நாம் எத்தனையோ தீச்செயல்களில் இறங்கிவிடுகின்றோம்! பிறரது இன்பத்தைக் கண்டு நாமும் இன்பம் அடைவதற்குப் பதிலாக நாம் துன்பப் படுகிறோம்! பிறர் இன்பத்திற்கு எப்படியும் இடையூறு விளைக்க எண்ணுகிறோம். இஃது எவ்வளவு அறியாமை! இந்த அழுக்காறு உணர்வு நம் இதயத்தில் இல்லையென்று நம்மில் மிகமிகச் சிலரே கூற முடியும். பிறருடைய ஏற்றத்தையும் இன்பத்தையும் கண்டு நாம் துன்பப்படுவதுபோன்ற மடமை வேறு இல்லை. அவ்வாறு நாம் துன்பப்படுவதால் விளையும் பயன் என்ன? நம் இன்பம் மறைகின்றது, நம் வாழ்விலே துன்பம் நிறைகின்றது, நம் வாழ்வே பாழாகின்றது! நம் உள்ளத்திலே அழுக்காறு தோன்றிவிடில் அறனும் ஆக்கமும் அகன்றுவிடுகின்றன :

"அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனுக்கம்
பேணது அழுக்கறுப் பான்" —குறள் - 163

பொருமை போன்றே நமக்கும் பிறருக்கும் துன்பங் கொடுப்பது பேராசையாகும். பிறர் பொருள்கள்மீது நாம் கொள்ளும் பேராசையும் அறமல்லாத பல செயல்களில் நாம் இறங்குவதற்குக் காரணமாகின்றது.

வாழ்வில் நமக்கு எத்தனை எத்தனையோ ஆசைகள் எழுகின்றன. அவற்றுக்கு எல்லையே இல்லை. நாம் ஆசைப் பட்ட ஒன்று கிடைத்தபின் வேறொன்றின் மேல் ஆசை செல்லு

கின்றது. அதுவும் கிடைத்தபின் மற்றொன்றை மனம் நாடுகின்றது. இவ்வாறு, முடிவில்லாத ஆசையால் உந்தப்படுகிறோம். இவ்வாறு, ஆசை நம்மை வஞ்சித்து எங்கெங்கோ இழுத்துச் செல்லுகின்றது. ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சிகளிலே எத்தனையோ அறமல்லாத செயல்களில் நாம் இறங்கிவிடுகின்றோம். எனவே, நம்மை வஞ்சிக்கும் ஆசைக்கு நாம் அஞ்சி நடத்தலே அறமாகும் என்கிறது, குறள் :

''அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா''

—குறள் - 366

நமது ஆசைக்கு இடையூறாக இருப்பவர்மீது நமக்குக் கோபம் வருகின்றது. சினத்தைப் போல் நமக்குத் தீமை பயப்பது வேறெதுவும் இல்லை. நாம் எவர்மீது கோபங் கொள்ளுகிறோமோ அவருக்கு நாம் எவ்விதத் தீங்கினைச் செய்யவும் தயங்குவதில்லை. தீச்செயல்கள் பலவற்றுக்கும் காரணம் சினமேயாகும். ஆதலால், எவர்மீதும் நாம் சினம் கொள்ளலாகாது என்கிறது, குறள் :

''மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்''

—குறள் - 303.

நம் உள்ளத்திலே சினமிருந்தால் நம் உதட்டிலே பிறப்பது கடுஞ்சொல்லாகும். இக்கடுஞ்சொல்லினால் பிறருக்குத் துன்பம் விளைகின்றது. தீயினாற் சுட்ட புண் ஆறினாலும் நாவினாற் சுட்ட வடு மாறுவதில்லை. பிறருக்குத் துன்பம் பயக்கும் இன்னாச்சொல் அறத்திற்கு மாறுபட்டதேயாகும்.

இவ்வாறு பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் இந்நான்கும் அறத்திற்கு மாறுபடுகின்றன. இந்நான்குமே பெரும்பாலும் நாம் பிறர் இன்பத்திற்கு இடையூறு விளைவிப்பதற்குக் காரணங்களாக இருக்கின்றன. ஆதலால் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவையனைத்தையும் அகற்றி வாழ்வதே அறவாழ்வு என்று கூறப்படுகிறது.

''அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்''

—குறள் - 35.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இந்நான்கினையும் நம் வாழ்விலிருந்து அகற்றுவது எவ்வாறு?

இறையுணர்வால் எழும் அன்புணர்வு நம் இதயத்தில் இசைந்திருந்தால் தீய உணர்ச்சிகள் எழுவதற்கு இடமிருப்ப

தில்லை. அன்புடையோர்பால் நாம் அழுக்காறு கொள்ளுவதில்லை. அவர்களுக்கு எதிராக அடங்காத சினமும் வருவதில்லை. அவர்களிடம் இன்னாத சொற்களைக் கூறவும் மாட்டோம். உலக வாழ்வின் உண்மை நிலையினை உணர்ந்தவர்கள் நிலையில்லாப் பொருள்கள் மேல் நிலையான ஆசை வைத்து, பேராசை என்ற பெருஞ்சுழியில் அகப்பட்டுத் தத்தளிக்கமாட்டார்கள்.

எனவே, உயிர்களோடு நமக்குள்ள உறவும், உலக வாழ்வின் உற்ற தன்மையும் நம் உள்ளத்திலே உறைந்து விட்டால் அழுக்காறு அவா வெகுளி ஆகிய அறத்திற்கு மாறுன உணர்ச்சிகள் மறைந்து விடுகின்றன ; நம் உள்ளத்திலிருந்து பிறக்கும் சொற்களும் இன்னுதனவாக இருப்பதில்லை. இவ்வாறு, இறையுணர்வே அழுக்காறு அவா வெகுளி இன்னுச் சொல் ஆகியவற்றைப் போக்கும் அருமருந்தாக உள்ளது.

அறத்தால் விளைவது சமுதாய இன்பம் என்று கண்டோம், சமுதாய இன்பத்தைப் பேணும் வகையில் உள்ள செயல்களே அறச்செயல்களாகப் போற்றப்படுகின்றன என்றும் கண்டோம்.

இறையுணர்வால் எழும் ஒருமையுணர்வு

சமுதாய இன்பத்தைப் பேணும் வகையில் நாம் நடக்க வேண்டுமெனில், சமுதாயத்தை ஒருமையாகக் காணும் உயர் பண்பு நம்மிடம் இருத்தல் வேண்டும். சமுதாயம் என்ற அமைப்பின் உறுப்புக்களாகவே நாம் உள்ளோம். அவ்வுறுப்புக்களில் எதற்குத் துன்பம் வந்தாலும் அது பிற உறுப்புக்களையும் பாதிக்கும் என்ற உண்மையை நாம் உணர வேண்டும். சமுதாயம் என்றுல் நம் நாட்டு மக்களனைவரையும் கொண்ட அமைப்பு. மனித சமுதாயம் என்றுல் உலக மக்களனைவருமே அதில் அடங்குகின்றனர். உலக மக்களனைவரையும் ஒன்றுக எண்ணும் உறவெண்ணந்தான் வரலாற்றுப் புகழ் பெற்ற அறவோர்களின் சீரிய பண்பாகச் சிறந்து விளங்குகிறது.

"உலகத்து உயிர்களையெல்லாம் என் உயிரெனப் போற்றி அவர்களை இன்புறச் செய்து, அவர்கள் துன்பம் அகற்றி, அச்சம் நீக்கி, அதனுல் நான் இன்புற வேண்டும்'' என்று இறைமையிடம் வேண்டுகின்றனர், மெய்யடியார்கள்.

"எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே
யெண்ணிநல் இன்புறச் செயவும்
அவ்வுயிர்களுக்கு வருமிடை யூற்றை
அகற்றியே அச்சநீக் கிடவும்,

செவ்வையுற்றுனது திருப்பதம் பாடிச்
சிவசிவ என்று கூத்தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுறுதிங்கே
ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்''

—திருவருட்பா.

''பிற மக்களுக்கு வரும் துன்பத்தைப் போக்கி அவர்களை இன்புறச் செய்வதே அறம். இந்த அறத்தால் நாம் பெறுவதே நிலையான இன்பம்'' என்பதை மெய்யறிவாளர்கள் தெளிவாகக் கூறியுள்ளனர். ''நமக்கென்று நம் இன்பத்தை மட்டுமே தேடி அலையும்பொழுது நமக்குத் துன்பமே விளைகின்றது. இதனுல் மனந்தளர்கின்ருேம், மதியழிகின்ருேம். ஆதலால், அறத்தினையே துணையாகக்கொண்டு மெய்யான இன்பத்தை நாம் பெற வேண்டும். இந்த உண்மையை நாட்டிலுள்ள இளைஞர்கள் நன்கு உணர வேண்டும்'' என்று பாடியுள்ளார், நாட்டின் நலனிலே நாட்டங்கொண்ட கவிஞர் :

''அறமொன் றேதரும் மெய்யின்பம் என்றநல்
லறிஞர் தம்மை அனுதினம் போற்றுவேன் ;
பிறவி ரும்பி உலகினில் யான்பட்ட
பிழை எத்தனை கோடி ! நினைக்கவும்
திறனழிந்தென் மனமுடை வெய்துமால்
தேசத்துள்ள இளைஞர் அறிமினே !
அறமொன்றே தரும் மெய்யின்பம் ; ஆதலால்
அறனையே துணையென்று கொண்டு உய்திரால்''

—பாரதியார் - 77.

அன்பர் பணியும் இன்ப நிலையும்

இறையுணர்வு இசைந்துள்ள இதயத்தில்தான் உலகுக்குத் தொண்டாற்றும் உயர்ந்த அறவுணர்வு மலர்கின்றது. இறையுள்ளம் தொண்டுள்ளமாகின்றது. அன்புணர்வோடு பணி செய்து அதனுல் வரும் மெய்யின்பத்தினையே மேவுகின்றது இறைமையில் இசைந்த நம் உள்ளம் :

''அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே''

இன்பத்தைத் தேடி ஏங்கி நாம் அலைய வேண்டியதில்லை ; அதனுல் பயனுமில்லை. பிறர் துன்பங்களைப் போக்கும் பெரும் பணியான அறவாழ்வினை நாம் மேற்கொண்டால் இன்பம் தானுகவே வந்து நம்மை அடைகின்றது ! இந்த உண்மையினை உணர்ந்து ஒழுகுமாறு நம்மைச் செய்கின்றது, இறையுணர்வு.

———

(தொடரும்)

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

துல்[4] (தெளிவுக் கருத்துவேர்)

(பரல்-கூ, ௩சகூ ஆம் பக்கத் தொடர்ச்சி)

துல்—துலங்கு. துலங்குதல்=1. ஒளிர்தல். (சூடா.). 2. விளக்கமாகத் தோன்றுதல். (W.). 3. தெளிவாதல். "துலங்கிய வமுதம்" (கல்லா. 5).

க. தொலகு. தெ. துலகிஞ்சு.

துலங்கு—துலக்கு=மினுக்கு. (W.). க. தொலகு.

துலக்கு—துலக்கம்=1. ஒளிர்வு. "துலக்க மெய்தினன் ஞேமில் களிப்பினே" (கம்பரா. இராவணன் களங். 1). 2. மெருகு. (W.). 3. தெளிவு. துலக்கமாய்த் தெரிகிறது. (உ. வ.).

துல் — துல்லியம் = தூய்மை. துல்லியமான ஆடை. (உ. வ.).

துல்—தெல். ஒ. நோ: குழு—கெழு. உ—எ (சொல்லாக்கத் திரிபுகளுள் ஒன்று).

தெல்—தென்—தென்பு=தெளிவு.

தென்பு—தெம்பு=1. தெளிவு. 2. உள்ளத்தெளிவு, ஊக்கம். இந்த வேலே செய்ய எனக்குத் தெம்பா யிருக்கிறது. (உ. வ.). 3. உடல் வலிமை. உடம்பில் ஒன்றுந் தெம்பில்லேயே! (உ. வ.). 4. திடாரிக்கம். "தெம்பை நானென்று காண்பேனே" (இராமநா. உயுத். 81).

தெ. தெம்பு. இச் சொல்லேத் தெலுங்கினின்று தமிழுக்கு வந்ததாகச் செ. ப. க. க. த. அகரமுதலி காட்டியுள்ளது.

தென்—தேன்=1. பிழிந்தெடுத்துத் தெளிந்த மது. "பாலொடு தேன்கலந் தற்றே" (குறள். 1121). 2. இனிமை. "தேனுறை தமிழும்" (கல்லா. 9). 3. இனிய கள். (சூடா.). 4. இனிய மணம். "அகிற்புகை யளேந்து தேனளாய்ப் பஞ்சுடை யமளிமேற் பள்ளி யேற்பவன்" (சூளா. குமர. 17). 5. தேன் கூடு. "தீந்தே னெடுப்பி" (ஐங்குறு. 272). 6. தேன் வண்டு. (திவா.).

ம. தேன், தெ. தேனெ, க. ஜேனு.

தேன்—தேம்=1. தேன். "தேம்படு நல்வரை நாட" (நாலடி. 239). 2. இனிமை. "தேம்பூங் கட்டி" (குறுந். 196). தேங்குழல் (உ. வ.). 3. கள், (சூடா.). 4. இனிய மணம். "தேங்கமழ் கோதை" (பு. வெ. 12: 7). 5. இனிய ஒலி. "தேம்பிழி மகர யாழின்" (கம்பரா. நாட்டுப். 4). 6. ஒளி மண ஊற்றினிமை. "தேங்கொள் சுண்ணம்" (சீவக. 12). 7. தேன் வண்டு. "தேம்பாய் கூந்தல்" (குறுந். 116). 8. தேன்போன்ற எண்ணெய். "தேங்கலந்து மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்" (குறிஞ்சிப். 111). 9. வண்டிற்குத் தேன்போன்ற மணமுள்ள யானைமதம். "தேம்படு கவுள.......யானை" (முல்லைப். 31).

தேம்—தீம்=1. இனிமை. 2. இனிய, இன்சுவையுள்ள. "தீந்தேன்." (குறுந். 179), "தீங்கனி" (ஷை 277), "தீம்பால்" (ஷை 27), "தீம்புளி நெல்லி" (ஷை 317), "தீம்புனல்" (149). 3. ஒலியால் இனிய. "தீம்பாலை" (சிலப். 7 : 48). 4. ஒலியாலும் சொல்லாலும் பொருளாலும் செய்யுளாலும் இலக்கணவிலக்கியத்தாலும் இனிய. "ஒண்டீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ" (திருக்கோ. 20).

தீம்—தீவு=இனிமை. தீவுதல்=இனித்தல்.

தீவு—தீவிய=1. இனிய. 2. இனியவை. "செவ்விய தீவிய சொல்லி" (கலித். 19).

தீம்தீம்—தீந்தீம்—தீந்தீ—திந்தி—தித்தி.

ஒ. நோ: சீச்சீ—சிச்சீ—சிச்சி. தம்தம்—தந்தம்—தத்தம்.

தீந்தி, திந்தி என்னும் இணைப் பண்டுகள் இறந்துபட்டன. முதலிரு கழக இலக்கியமும் குமரிநாட்டு உலக வழக்கும் இன்றின்மையால், இவற்றிற்கு எடுத்துக்காட்டில்லை.

தித்தித்தல்=இனித்தல். "திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ" (திவ். நாய்ச். 7: 1).

தித்தி=1. தித்திப்பு. (w.). 2. பேரீந்து. (w.). 3. இன்பம்.

இது செ. ப. க. க. த. அகர முதலி குறிக்கின்றவாறு, ஒலிக் குறிப்புச் சொல்லன்று.

தித்திப்பு = 1. இனிப்பு. "தித்திக்கு மோர் தித்திப் பெலாங் கூட்டியுண்டாலும்" (அருட்பா, vi, நடராஜ. 10). 2. இனிப்புள்ள பண்டம்.

தேன்—தேனி. தேனித்தல் = 1. இனித்தல். 2. இன் புறுதல், மகிழ்தல். "கேசவன் பேரிட்டு நீங்கள் தேனித் திருமினோ" (திவ். பெரியாழ். 4 : 6 : 1).

தேன்—தென் = இனிமை. "தென்னிசை பாடும் பாணன்" (திருவாலவா. 56 : 7).

தென்—தின்—இன் = 1. இனிமை. "இன்வள ரிளம் பிறை" (சீவக. 1008). 2. இனிய. "இன்சொ லினிதீன்றல் காண்பான்." (குறள். 99).

க. இன். ஒ. நோ : தொண்பது—தொன்பது—ஒன்பது.

இன்—இன்பு = இனிய நுகர்ச்சி. "வளநகரம்பரின்பொடு புரியவர்" (தேவா. 553 : 8).

தெ. இம்பு, க. இம்பு (p).

இன்பு—இன்பம் = 1. இனிமை. "கண்டு தண்டாக் கட்கின்பத்து" (மதுரைக். 16). 2. இனிய காம நுகர்ச்சி. "அறம் பொரு ளின்பம்" (குறள். 501). 3. திருமணம். "கொம்பனையாளையும்.........குன்றனையாளையும்.......இன்பமியற் றினர்" (சீவக. 1980). 4. அகமகிழ்ச்சி. (திவா.). 5. சொல் லும் பொருளும் சுவைபடுங் குணம். "சொல்லினும் பொரு ளினுஞ் சுவைபட லின்பம்." (தண்டி. 18).

இன்—இனி. இனித்தல் = 1. தித்தித்தல். 2. செவிக் கின்பந் தருதல்.

இனி—இனிமை = 1. தித்திப்பு. (பிங்.). 2. இன்பம். "இனிமை கூர்ந்து" (திருவாலவா. 1 : 18).

தெல்—தெர்—தெரி. தெரிதல் = செ. குன்றிய வி.—1. கண் காணுதல். அவனுக்குக் கண் தெரிகிறது. (உ. வ.). 2. பொருள் தோன்றுதல், தொலைவில் ஓர் உருவம் தெரி கின்றது. (உ. வ.). 3. தெளிவாதல், விளக்கமாதல். "தன்னால் நிகழ்ந்த தன்மை தானே தெரியச் சொன்னாள்" (கம்பரா. நகர்நீ. 37). 4. மனமறிதல். தெரிந்து செய்த தீவினை. (உ. வ.).

செ. குன்று வி.—1. அறிதல். ''எல்லாந் தெரிந்த இறைவா'' (தாயு. காண்பேனோ. 33). 2. செவியுற்றறிதல். ''தெரிதல் நினைத லெண்ண லாகாத் திருமாலுக்கு'' (திவ். திருவாய். 6 : 9 : 11). 3. ஆராய்தல். ''திறந்தெரிந்து தேறப் படும்.'' (குறள். 501). 4. தெரிந்தெடுத்தல். ''புனை மாண் மரீஇய அம்பு தெரிதியே'' (கலித். 7). 5. அரித் தெடுத்தல். (திவா.). ம. தெரி(யுக). தெ. தெலியு.

தெரித்தல்=1. வெளிப்படுத்துதல். ''தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே'' (கம்பரா. சிறப். 6). 2. சொல்லுதல். (திவா.). 3. குறிப்பிட்டு விளக்குதல். ''தெரித்து மொழி கிளவி'' (தொல். சொல். 56). 4. கொழித்தல். (யாழ். அக.). 5. தெரிந் தெடுத்தல். ''தெரித்த கணையாற் றிரிபுர மூன்றுஞ் செந்தீயின் மூழ்க'' (தேவா. 10 : 7).

தெரிக்கல்=விளத்தமாய்ச் சொல்லுதல். ''சைவத் திறத் தினைத் தெரிக்க லுற்றும்'' (சி. சி. பாயி. 2.).

தெரியல்=1. தெரிந்தெடுத்தல். ''தேங்கமழ் தெரியற் றீம்பூந் தாரவன்'' (சீவக. 2253). 2. தெரிந்தெடுத்த பூவால் தொடுத்த மாலை. ''புனைவினைப் பொலிந்த பொலனறுந் தெரியல்'' (புறநா. 29).

தெரிவை=1. 25 முதல் 31 வரைப்பட்ட அகவையுள்ள பெண். (திவா.).

தெர்—தெருள். தெருள்தல்=1. தெளிதல். ''தெருண்ட வறிவினர்'' (நாலடி. 301). 2. மெய்யறிவுறுதல். ''தெரு ளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்'' (குறள். 249). 3. உண்மை விளங்குதல். ''வளமலை நாடனைத் தெருள...... நீயொன்று பாடித்தை'' (கலித். 43). 4. பெண் பூப்படைதல். பிள்ளை தெருண்டு விட்டாள். (உ. வ.). 5. பெயர் பரவி விளங்குதல். ''தெருளு மும்மதில்'' (திருவாச 26 : 10).

தெருள்=1. தெள்ளுணர்வு. ''தெருளு மருளு மயங்கி வருபவள்'' (கலித். 144). 2. தெள்ளறிவு (ஞானம்). ''தெருளு மருளு மாய்த்து'' (திவ். திருவாய். 8 : 8 : 11).

மயக்கத்தையும் அறியாமையையும் குறிக்கும் மருள் என்னும் சொல்லும், அதற்கு மறுதலையான தெருள் என்னும் சொல்லும், எதுகையா யிருத்தலை நோக்குக.

தெர்—தேர். தேர்தல்=1. உள்குதல் (சிந்தித்தல்.) 2. ஆராய்தல். ''தேர்ந்து செய்வஃதே முறை'' (குறள். 541). 3. தேடுதல். ''சிறுவெண் காக்கை........யிரைதேர்ந்துண்டு'' (ஐங்குறு. 162). 4. தேற்ற முறுதல். (நிச்சயித்தல்). ''பேதை பாகனே பரமெனத் தேர்ந்துணர் பெரிய'' (திருவிளை. புராண வர. 8). 5. தெளிவாக அறிதல். ''தேர்ந்தனன் முருகன் வாய்மை'' (கந்தபு. மூவாயிர. 81). 6. தெரிந் தெடுத்தல். (செ. குன்றிய வி.) பயின்று திறமை பெறுதல். ம. தேருக.

தேர்ச்சி=1. ஆராய்ச்சி. 2. தெளிவு. 3. பயிற்சி யாற்பெறும் பெருந் திறமை. ம. தேர்ச்ச.

தேர்வு=1. ஆராய்ச்சி. 2. திறமை யறிகை.

தேர்தல்=பொதுமக்கள் ஆட்சித் தலைவனைத் தேர்ந் தெடுக்கை (இக்கால வழக்கு).

தெல்—தெள். தெள்ளுதல்=1. கொழித்தல். ''வன்னத் தினைமாவைத் தெள்ளியே'' (அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து). 2. ஆராய்தல். ''தெள்ளி யறிந்த விடத்தும்'' (நாலடி. 380). 3. நீர் தெளிதல். ''தெள்ளுநீர்க் காவிரி'' (மணி. 22 : 40). 4. அறிவு தெளிதல். ''புள்ளுணர் முது மகன் தெள்ளிதிற் றேறி'' (பெருங். 56 : 7). 5. விளங்குதல். ''தெள்ளுங் கழலுக்கே'' (திருவாச. 10 : 19).

தெள்ளிமை=1. தெளிவு. 2. அறிவு நுட்பம். ''சொன்ன தென்ன தெள்ளிமையோ'' (விறலிவிடு.).

தெண்மை = 1. தெளிவு. 2. அறிவின் தெளிவு. ''தெண்மை யுடையார்'' (பு. வெ. 8 : 12, உரை).

தெள்ளியர்=தெளிந்த அறிவினர். ''தெள்ளிய ராதலும் வேறு'' (குறள். 374).

தெள்விளி=1. தெளிந்த இசை. ''கோவல ராம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற'' (குறிஞ்சிப். 222). 2. தெளிந்த சொல். ''வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடை பயிற்றி'' (குறிஞ்சிப். 100).

தெள்—தெள்கு. தெள்குதல்=தெளிவாதல்.

தெள்—தெட்பு=தெளிவு. தெட்பு—தெட்பம்=1. தெளிவு. 2. தேற்றம், திடம். ''சயந்த னங்க ணிருந்தனன் றெட்ப

மெய்தி'' (கந்தபு. இந்திரன் கரந். 37). 3. மூதறிவு (திவா.). 4. முதிர்ச்சி.

தெட்ட=1. தெளிவான. ''மால்கரி தெட்ட மதப்பசை கட்டின'' (கம்பரா. சரபங்க. 8). 2. முற்றிய. ''தெட்ட பழஞ் சிதைந்து'' (திவ். பெரியதி. 3 : 4 : 8).

தெட்டவர்=தெளிந்த அறிவினர். ''பரம ஞானம் போய்த் தெட்டவ ரல்லரேல்'' (கம்பரா. மந்திர. 20).

தெள்—தெளி=1. ஒளி. ''தெளிவளர் வான்சிலை'' (திருக்கோ. 16, உரை). 2. தெளிவு. ''தெளிகொண்ட வெங்கள்'' (பு. வெ. 1 : 15). 3. தெளிந்த சாறு. ''கரும்பின் றெளி'' (தேவா. 280 : 5).

தெளிதல்=செ. குன்றிய வி.—1. ஒளிர்தல். 2. வெண்மை யாதல். 3. அமைதி யுறுதல். ''தெளியா நோக்க முள்ளினே'' (அகநா. 33). 4. தெளிவாதல். 5. ஐயம் நீங்குதல். 6. முடிவிற்கு வருதல். 7. நோய் நீங்குதல். நோய் தெளிந்து விட்டது. (உ. வ.). 8. ஆள் செழிம்பாதல். ஆள் இன்று நன்ருய்த் தெளிந்து விட்டான். (உ. வ.). 9. பஞ்சம் நீங்குதல். பஞ்சந் தெளிந்தது. (உ. வ.).

செ. குன்ரு வி.—1. ஆராய்தல். 2. தெளிவாக அறிதல். ''பிரியலேந் தெளிமே'' (குறுந். 273). 3. நம்புதல். ''தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்'' (குறள். 510).

ம. தெளியுக, க. திளி.

தெளிவு= 1. ஒளிர்வு, விளக்கம். 2. துலக்கம். 3. பொருள் வெளிப்படையாகத் தோன்றும் செய்யுட்குணம். ''தெளிவெனப் படுவது பொருள்புலப் பாடே'' (தண்டி. 16). 4. உடற் செழிம்பு. 5. தெளிந்த சாறு. ''கரும்பின் தெளிவே'' (திருவாச. 5 : 55). 6. தெளிந்த பனஞ்சாறு, பதநீர் (கொங். வ.). 7. கஞ்சித் தெளிவு. 8. தெள்ளறிவு. (பிங்.). ''நறுமா மலர் கொண்டு நின்றேத்தத் தெளிவாமே'' (தேவா. 1114 : 6). 9. நனவு. (திவா.). 10. மனத்தெளிவு. (திவா.). 11. ஆராய்ந்து கொண்ட முடிபு. ''தெளிவி லதனைத் தொடங்கார்'' (குறள். 464). 12. நம்பிக்கை. ''தெளிவிலார் நட்பிற் பகை நன்று'' (நாலடி. 219.). 13. மனவமைதி. 14. நற்காட்சி. ''அறத்துளார்க் கெலாமினியராத லதுதெளிவே'' (சீவக. 2816.). 15. தூக்க நீக்கம், தூக்கந் தெளிந்துவிட்டது (உ. வ.)

16. மெய்ப்பு. தக்க தெளிவில்லாததால் வழக்குத் தள்ளுபடியாயிற்று. (நாஞ்.).

ம. தெளிவு, க. திளி.

தெளியக் கடைந்தவன்=ஏமாறுதவன், எவரையும் எளிதாய் நம்பாதவன். (உ. வ.).

தெளிச்சல்=உடற்செழிம்பு. வேலை முடிந்தபின் அவனுக்கு உடம்பில் தெளிச்சல் காணுகிறது. (நாஞ்.).

தெளிஞன்=அறிஞன். (W.)

தெளி—தெளிர். தெளிர்தல்=1. ஒளிபெறுதல். "வண்ணந் தெளிர" (பரிபா. 10 : 95).

தெளிர்த்தல்=1. தெளிவா யொலித்தல். "இலங்குவளை தெளிர்ப்ப வலவ னூட்டி" (ஐங்குறு. 197.). 2. செழித்தல். "வறந்த ஞாலந் தெளிர்ப்ப வீசி" (ஐங்குறு, 452.). 3. மகிழ்ச்சியுறுதல். "சேயிழை தெளிர்ப்பக் கவைஇ" (அகநா. 51.).

தெள்—தெறு—தெற்று=தேற்றம். (W.).

தெற்றென்னுதல்=தெளிதல். "தெற்றென்க மன்னவன் கண். (குறள். 581.).

தெற்றென=தெளிவாக. "யானுந் தெற்றென வுணரேன்" (அகநா. 48.).

தெற்றெனவு=1. தெளிவு. தெற்றென வில்லார் தொழில்" (திரிகடு. 54.). 2. வெட்கமின்மை. (தவறான தெளிவு). "சோற்றை முன்னிருந்து முற்றத்தான் துற்றிய தெற்றெனவும்" (திவ். இயற். பெரியதிரு. 141.).

தெற்று—தெற்றல்=அறிவில் "தெள்ளியவன். "இணைமருதிற்று வீழ நடைகற்ற தெற்றல்" (திவ். பெரியதி. 11 : 4 : 9).

தெறு—தேறு. தேறுதல்=(செ. குன்றிய வி.)—1. நீர் தெளிதல். "தேறுநீர் சடைக்கரந்து" (கலித். கட. வாழ்.). 2. மயக்கந் தெளிதல். 3. மனந்தெளிதல், அறிவு தெளிதல். "உடன்மூவர் சொற்றொக்க தேறப் படும்" (குறள். 589.). 4. செழிம்புறுதல். நோய் நீங்கி உடல்தேறி வருகிறான். (உ. வ.) 5. ஆறுதலடைதல். 6 திடங்கொள்ளுதல். 7. தேர்ச்சியடைதல். 8. தேர்வில் வெற்றி பெறுதல். 9. முதிர்தல்.

தேறின காய். (உ. வ.). 10. உருப்படியாதல். எல்லாம் புடைத்தெடுத்தால் ஒருபடி தேறும். (உ. வ.). 11. கூடுதல். "ஒரு காசு பேணின் இரு காசு தேறும்." (பழமொழி).

செ. குன்றுவி.—1. நம்புதல். "தேற்றாது செய்வார்களைத் தேறுதல் செவ்விதன்றால்" (கம்பரா. வாலிவ. 33). 2. துணிதல். "தேறுவ தரிது" (கம்பரா. மாயா சீதை. 89). 3. சேருதல். "அழிவின்கட் டேறான் பகாஅன் விடல். (குறள். 876). தெ. தேரு, க. தேரு.

தேறு=1. தெளிவு. 2. தேற்றம். (சூடா.). 3. தேற்றாங் கொட்டை. "தேறுபடு சின்னீர் போல" (மணி. 23 : 142).

கலங்கிய நீரைத் தெளியச் செய்வதால், இல்லம் (தேற்றாங் கொட்டை) தேறு எனப்பட்டது.

"இல்லின்—படுகாழ்ப் படுத்துத் தேய்வை யுறீஇக் கலுழி நீக்குங் கம்மியர் போல" (பெருங். 35 : 215-17).

இல்=இல்லம்.

"கலஞ்சிதை யில்லத்துக் காழ்கொண்டு தேற்றக் கலங்கிய நீர்போற் றெளிந்து நலம்பெற்றாள் நல்லெழில் மார்பனைச் சார்ந்து" (கலித். 142, சுரிதகம்).

இதன் நச். உரை :—"தேய்க்குங் காலத்தே சிதைக்கின்ற தேற்றாவினுடைய விதையைக் கொண்டு கலத்தே மெல்லத் தேற்றக் கலங்கிய நீரிற் சிதைவு தெளியுமாறு போல....... பெற்றாள்."

தேறுகடை=தீர்மானம். அவன் அவ்வாறு தேறுகடை பண்ணினான். (உ. வ.)—(W.).

தேறுசூடு=ஆடு மாடுகள் தேறுவதற்கு இடுஞ் சூடு.

தேறுதலை=1. ஊக்குவிப்பு. 2. ஆறுதல்.

தேறுமுகம்=பற்றுக் கோடு. "தேறுமுக மின்றித் திரிந்தேமை யாள" (கந்தபு. தேவர்கள் போற். 4).

தேறல்=1. தெளிவு. (பிங்.). 2. தெளிந்த கள். "தேக்கட் டேறல்." (புறநா. 115). 3. தேன். "மலர்த்தேற லூறலின்" (தேவா. 9413). 4. தெளிந்த சாறு. "ஆனெயைக் கரும்பினின் றேறலை" (திருவாச. 5 : 38). ம. தேறல், தெ. தேர.

தேறு — தேற்று = 1. தெளிவிக்கை. 2. தெளிவு "சொற் பொருளின் றேற்றறிந் தேனே" (சிவப். நால்வர். 28). 3. தேற்றாங் கொட்டை. "தேற்றின் கலங்குநீர் தெளிவ தென்ன" (ஞானவா.).

தேற்று—தேற்றம் = 1. தெளிவு. "தேற்றச் சொற் றேர்வு" (நாலடி. 259). 2. உறுதி. "தேற்றம் வினவே" (தொல். சொல். 259). 3. மனங் கலங்காமை. "தேற்ற மவாவின்மை" (குறள். 513). 4. ஆறுதல். 5. செழிம்பு. 6. சூளுறவு. "தீராத் தேற்றம்." (தொல். பொ. 102). ம. தேற்றம், தெ. தேட்ட, க. தேட்டெ.

தேற்றம்—தேற்றன் = மெய்யறிவன். "தேற்றனே தேற் றத் தெளிவே" (திருவாச. 1 : 82).

தேற்று—தேற்றரவு = 1. தேற்றம். 2. ஆறுதல்.

தேற்றரவாளன் = 1. திடநெஞ்சன். 2. ஆறுதல் சொல் வோன். 3. தூய ஆவி (கிறித்தவ வழக்கு).

தேற்றரவாளி = தேற்றரவாளன்.

தேற்று—தேற்றா = 1. தேற்றா மரம். 2. தேற்றாங் கொட்டை. ம. தேற்றா.

தேற்றா—தேற்றான் (தைலவ. தைல.).

தெள்—தெடு. தெடுதெடுவெனல் = (தெளிந்து) 1. நீர்ப் பதமா யிருத்தல் (நெல்லை வழக்கு).

தெடு—தெடாரி = தெளிந்த கண்ணையுடைய பறைவகை.

"கடாஅ யானைக் கால்வழி யன்னவென்
தெடாரித் தெண்கண் தெளிர்ப்ப வொற்றி" (புறநா. 368)

தெடாரி — தடாரி.

"சிதாஅர் வள்பிற் சிதர்ப்புறத் தடாரி
யூன்சுகிர் வலந்த தெண்க ணொற்றி" (புறநா. 381)

———

சேனாவரையரும் உரையாசிரியரும்

[பேராசிரியர், ஆ. சிவலிங்கனார், மயிலம்]

3. முற்றெச்சம்*

முற்றும் எச்சமும்

ஒருவினைச்சொல் திணை, பால், எண், இடம் ஆகிய வற்றோடு காலத்தையும் உணர்த்துமானால் அது முற்று எனப் படும். ஒரு வினைச்சொல் உணர்த்த வேண்டுவன இவையே. இவற்றை உணர்த்துதற்குரிய விகுதிகள் இடைநிலைகள் யாவும் முடிய நிற்கும் சொல் முற்று எனப்படும். 'உண்டான்' என்பதில் இறுதி 'ஆன்' என்பது உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை என்பனவற்றை யுணர்த்த, அஃதூர்ந்த 'ட்' என்பது இறந்த காலத்தை யுணர்த்தியது காணலாம்.

உண்டுவந்தான் என்றவிடத்து, 'உண்டு' என்பதில் திணை, பால், எண், இடம் ஆகியவற்றை யுணர்த்தும் இறுதி யில்லை. ஆனால் இறந்த காலத்தை யுணர்த்தும் 'ட்' என்பது மட்டில் உண்டு. அதனால் சொல் வடிவத்தில்—திணை முதலிய வற்றை யுணர்த்தும் உறுப்பு இல்லாத இது அவற்றை எஞ்சி யிருத்தலின் எச்சம் எனப்படும்.

சொல் தொடர்தல்

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்றாலும் சொற்கள் தனித்து நில்லாமல் தொடர்ந்தே வரும். கருதிய பொருளை அறிவிக்கச் சொற்கள் கருவியாகப் பயன்படுதலின் சொற்கள் தொடர்ந்தே வரும். அப்படித் தொடரும்போது எவ்வெச்சொல் எவ்வெச்சொல்லொடு தொடரலாம் என வரையறை யுண்டு. அதற்கேற்ப ஒரு முற்று, தனித்து நில்லாது ஒரு சொல்லுடன் தொடரும்போது பெயர்ச்சொல்லுடன்தான் தொடரும் என்பது விதி.

"எத்திறத் தானும் பெயர்முடி பினவே" (தொல். சொல். 429) என்பது முற்றுக்கு விதிக்கப்பட்ட விதி. 'உண்டான் சாத்தன்' எனக் காணலாம்.

---

*அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறையினர் நடத்திய 'தமிழ் இலக்கணக் கொள்கைகள்' பற்றிய இரண்டாவது கருத்தரங்கில் 18—2—1973 அன்று படிக்கப் பெற்றது. மொழியியல் துறை இயக்குநர், டாக்டர், ச. அகத்தியலிங்கம் M. A., Ph. D. அவர்கட்கு என் நன்றி.

எச்சம் என்பது இருவகை ; பெயரெச்சம், வினையெச்சம் என. பெயரெச்சச் சொல் பெயருடன் தொடரும். வினையெச்சச் சொல் வினையுடன் தொடரும். 'உண்ட சாத்தன்', 'உண்டு வந்தான்' எனக் காணலாம்.

முற்றெச்சம்

'எச்சம்' என்பது பெயரையாவது வினையையாவது தொடரும் என்பதால் அதுபற்றி யாதோர் குறையும் நேராது. 'முற்று' என்பது தனக்கு விதித்த பெயரொடு தொடராமல் வினையொடு தொடருமானால் அது குறைபாடுடையதாம். வினையொடு தொடரக்கூடாது என்பதற்காகவே ஆசிரியர் தொல்காப்பியர்,

"எத்திறத் தானும் பெயர்முடி பினவே"

என்றார்.

'சாத்தன் உண்டான் வந்தான்' என்ற தொடரில், 'உண்டான்' என்ற முற்று 'வந்தான்' என்ற வினையொடு தொடர்ந்தது. இது விதிக்கு மாறுபட்டது. அதனால் 'உண்டான்' என்பதை முற்று எனக் கொள்வதற்கில்லை. வினையொடு தொடர்தற்குரிய ஒரு வினைச்சொல், எச்சமாகத்தான் இருக்க முடியும். எனவே, 'உண்டான்' என்பது முற்றாக இருந்தாலும் எச்சமாகத் திரித்துக் கொள்ள வேண்டும். சொல் நிலையில் முற்றாக இருந்தாலும் பொருள்வகையில் எச்சமாக இருத்தலின், 'முற்றுவடிவில் உள்ள எச்சம்' எனக் கொள்ள வேண்டும். அதுவே 'முற்றெச்சம்' எனப்படும். 'உண்டான் வந்தான்' என்பது, 'உண்டு வந்தான்' எனப் பொருள்படும்.

தொல்காப்பியர் சொன்னது

முற்று எச்சமாக வரும் எனத் தொல்காப்பியர் வெளிப்படையாகத் தனி நூற்பாவில் சொல்லவில்லை. "'செய்கு' என்னும் தன்மையொருமை வினைமுற்றுச் சொல் பெயருடன் தொடர்தலேயன்றி வினையுடனும் தொடரும் ; தொடர்ந்தாலும் அது முற்று என்ற இயல்பில் திரியாது" என்ற கருத்தில்

"செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்" (தொல். சொல். 204)

என்றார். இவ்விடத்துச் சேனாவரையர்,

"செய்கென் கிளவி அவ்வியல் திரியா" தெனவே,
பெயர்த்தனென் முயங்கயான்' (குறுந். 84) எனவும்,

‘தங்கினை சென்மோ’ (புறம். 320) எனவும், ‘மோயினள் உயிர்த்த காலை’ (அகம். 5) எனவும் ஏனை முற்றுச்சொல் வினை கொள்ளுங்கால் அவ்வியல் திரியும் என்பதாம். அவை திரிந்தவழி வினையெச்சமாதல், ‘வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய’ (சொல். 457) என்புழிப் பெறப்படும்’’

என்றெழுதியுள்ளார். சேனாவரையர் எழுத்திலிருந்தும் நாம் வினைமுற்று எச்சமாக வரும் எனத் தொல்காப்பியர் வெளிப் படையாகக் கூறவில்லை என அறியலாம். முற்று எச்சமாக வருவதைக் குறிப்பாகவே கொள்ள வைத்தார்.

முற்றெச்சம்—பொருள்

‘பெயர்த்தனென் முயங்க’ என்றவிடத்துப் ‘பெயர்த் தனென்’ என்பது, ‘பெயர்த்தேன்’ என்ற பொருள் தருதலின் முற்றாக இருந்து ‘பெயர்த்து’ என்ற பொருளில் ஆளப்படுதலின் எச்சமாகத் திரிந்தது. ஆதலின் ‘முற்றெச்சம்’ என்பதற்குப் பொருள், ‘‘முற்றானது எச்சப் பொருளில் வருவது’’ எனக் கூறலாம். சேனாவரையர் இக்கருத்துடையவரே.

‘பெயர்த்து’ என்றிருக்க வேண்டிய ‘சொல்—அஃதாவது எச்சமாக இருக்க வேண்டிய சொல், ‘பெயர்த்தனென்’ என முற்றாய் வந்தது என்று உரையாசிரியர் கருதினர். அவர் கொள்கைப்படி, ‘முற்றெச்சம்’ என்பது, ‘‘முற்றாகத் திரிந்து வந்த எச்சம்’’ எனப் பொருள்படும்.

எனவே, முற்றெச்சம் என்பது (1) முற்றானது திரிந்த எச்சம் எனவும், (2) முற்றாகத் திரிந்த எச்சம் எனவும் இரு பொருள்படும் என அறியலாம்.

தொல்காப்பியர் கருத்து யாது?

உரையாசிரியர்

இவ் விருவகைப் பொருளும் பொருந்துமேனும் ஆசிரியர் எதைக் கருதி யிருப்பார்? ‘‘வினையெச்சத்துக்குக் கூறப்பட்ட இலக்கண முடிபுகளேயன்றி வேறுபட்ட முடிபுகளும் வினை யெச்சம் கொள்ளும்’’ என்ற பொதுவான கருத்தில்,

‘‘வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய’’

(தொல். சொல். 457)

என்றார். ‘‘வினையெச்சமானது வேறுபட்ட இலக்கணம் பெறுதல்’’ என்பது (1) தனக்கு இயல்பாக வுரிய ஒருவாய்

பாட்டெச்ச நிலையில் திரிந்து வேறு வாய்பாட்டெச்ச நிலையில் வருதலும், (2) தன் எச்ச நிலை திரிந்து முற்று நிலையில் வருதலும் என இருவகைப்படும்'' என்பர் உரையாசிரியர்.

(1) ''உரற்கால் யானை ஒடித்து உண்டு எஞ்சிய''

(2) ''பெயர்த்தனென் முயங்க''

என்பன முறையே அவற்றுக்குக் காட்டுகளாம்.

எனவே வினையெச்சம் வேறுபட்ட இலக்கணத்ததாய் வரும் என்றமையால் 'முற்றெச்சம்' என்பது, 'எச்சமாக இருப்பதே முற்றாகத் திரிவது' என்னும் பொருளுடையதாம் என்னலாம்.

சேனுவரையர்

'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய' என்ற நூற்பாவுக்குச் சேனுவரையர் உரை கூறியபோது ''வேறுபட்ட பல இலக்கணங்களை வினையெச்சம் கொள்ளும்'' எனக் கூறி, அவற்றுள் ஒன்றாக,

> ''மோயினள் உயிர்த்த காலை'' எனவும், ''கண்ணியன் வில்லன் வரும்'' (குறிஞ்சி 1) எனவும் முற்றுச் சொல்லது திரிபாய் வருதலும்''

கூறினர். எனவே, 'முற்றுச் சொல், சொல்லால் திரியாமல் பொருளால் எச்சமாகத் திரிந்து வருவது முற்றெச்சம்' எனக் கொண்டார் அவர் என்னலாம். மோயினள் என்பது, 'மோயினளாய்' எனப் பொருள்படும்.

தொல்காப்பியர்

''வினைமுற்றென்பது உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை ஆகிய மூன்று பொருள்கள்தோறும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடங்களில் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலம் பற்றித் தெரிநிலை, குறிப்பு என்ற இரண்டு வகையில் வரும்'' எனக் கூறி, (தொல். சொல். 247) ''எவ்வயின் வினையும் அவ்வியல் நிலையும்'' (தொல். சொல். 248) என்றும் கூறினர். இந்நூற்பாவின் பொருள், ''எவ்விடத்து வினையாயினும்—எல்லாவினையும்—முற்றுச் சொல்லாகவே நிற்கும்'' என்பதாம். (வேறு பொருளும் கூறுவர்.) இவ்விடத்துச் சேனுவரையர்,

> ''எல்லா வினையும் முற்றுச் சொல்லாம் எனவே, எச்சமாதல் ஒருதலையன்று என்பதாம். ஆகவே, வினைச் சொல்

லாதற்குச் சிறந்தன முற்றுச் சொல்லே என்பதாம். எல்லா வினையும் முற்றுச் சொல்லாகலும் கச்சினன், கழலினன், நிலத்தன், புறத்தன் என்னும் தொடக்கத்து வினைக் குறிப்பின் முதல்நிலை எச்சமாய் நில்லாமையும் வழக்கு நோக்கிக் கண்டு கொள்க''

என்றெழுதியுள்ளார்.

எனவே, இயல்பான முற்றுச் சொல்லே காலப் போக்கில் எச்சமாக மாறும் என இதுகொண்டு நாம் உணரலாம். அஃதாவது 'உண்டான்' என்ற சொல்லே சிதைந்து, 'உண்டு' என எச்சமாக வந்ததாக அறியலாம். அதனால் 'உண்டான் வந்தான்' என்ற தொடரே 'உண்டு வந்தான்' என ஆகியிருக் கலாம். சேனுவரையர் 'உண்டானுய் வந்தான்' என்றே கொள்வர்.

ஒரு காலத்தில் முற்ருக இருந்த சொல்லே காலப்போக்கில் சிதைந்து எச்சமாகத் திரிந்தது என்பதைக் கொண்டு பார்த்தால் 'முற்றெச்சம்' என்பது, 'முற்று தான் எச்சமாகத் திரிவது' என்ற பொருள் படுதலை யறியலாம். இதற்குத் தொல்காப்பியர் தரும் பிறிதொரு சான்றும் உண்டு.

> ''செய்கென் கிளவி வினையொடு முடியினும்
> அவ்வியல் திரியா தென்மனுர் புலவர்'' (தொல். சொல். 204)

என்ற நூற்பாவும் சான்றுபகரும். 'செய்கு' என்பது தன்மை யொருமை எதிர்கால வினைமுற்று. வினைமுற்று பெயரொடு முடிய வேண்டும் என்ருராகலின் 'செய்குயான்' என அது வரும். அவ்வாறன்றி 'செய்கு வந்தேன்' என வினையொடு முடிந்தாலும் அச் 'செய்கு' என்பது வினைமுற்று நிலையில் திரிதல் இல்லை. எனவே, மற்றைய வினைமுற்றுகள் வினையொடு முடிந்தால் திரிதல் உண்டு. இது கொண்டு பார்க்குமிடத்து வினைமுற்றே எச்சமாகத் திரியும் என்பது பெறப்படும். இத் தெளிவினுல் தான் நன்னூலார்,

> ''வினைமுற்றே வினையெச்ச மாகலும்'' (நன். 351)

என்ருர்.

இதுகாறும் கூறியவாற்ருல் 'முற்றெச்சம்' என்பது முற்றுச் சொல்லே பொருளால் எச்சமாகத் திரிவது என்றும், பிற் காலத்தார் முற்றுச் சொல்லையே எச்சச் சொல்லாகத் திரித்தனர் என்றும் அறியலாம்.

ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(முன் இதழ் ௭௦௫ஆம் பக்கத் தொடர்ச்சி)

2. கெனியா வளமை

அந்த இரண்டு பெண்களும் தொலைபேசியிற் பேசினர்: ''ஹல்லோ, சரி, சரி. மகிழ்ச்சி'' இன்னும் ஐந்து மணி ஓய்வு; பிறகு ஜோஹன்ஸ்பர்க்கிலிருந்து விமானம் வரும்; பிறகு அமெரிக்க விமானம் வரும். நாம் இங்கே அமைதியாகப் பேசலாம். நீங்கள் என்ன சாப்பிடுவீர்கள்? இதோ சாப்பாட்டுச் சீட்டுத் தருகிறேன்.

நான் சீட்டை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றேன். எல்லாம் வெள்ளையர் பாங்கில் உணவுகள். ஆட்டுக்கறி, மாட்டுக்கறி, மீன் குழம்பு, கோழிக் கூட்டு, விஸ்கி, ரம், ஷாம், வைன் ;- இவை மிகுதி. இடையே ரொட்டி, அவித்த காரூட்டு, காலிஃப்ளவர் (செண்டுக் கீரை), பச்சை வெள்ளரி, கீரை, தக்காளி, வெண்ணெய். நான் சுற்றிப் பார்த்துத் திரும்பி வந்து எனது பையிலிருந்த கனிகளையும் முந்திரிப் பருப்பையும் எடுத்து மேசைமேல் வைத்தேன். உளுந்து வடையும் பூரியும் இருந்தன. அந்தப் பெண்களுக்கு அளித்தேன். அவர்கள் வணக்கப் புன்னகையுடன் இரண்டையும் உண்டு ''மிக நன்று'' என்றனர். நான் கனியுண்பதைக் கண்டு தங்களிடம் இருந்த ஆப்பிள் ஒன்றைத் தந்தனர்.

பெண்கள்: இதுதான் உங்கள் உணவா?

நான்: ஆம் அம்மா! இது போதாதா?

பெண்கள்: நீங்கள் மரக்கறி யுண்பவரா?

நான்: நூற்றுக்கு நூறு

பெண்கள்: மீன், ஊன், சாராயம்?

நான்: ஊஹூம்!

பெண்கள்: ஒரு கோப்பை விஸ்கி குடித்துப் பார்க்கலாமே?

நான்: வெந்நீர் கிடைத்தால் போதும்.

ஒரு பெண் உள்ளே சென்று தூய வெந்நீர் கொணர்ந்தாள்.

நான்: அஃஜாண்டேம்னே (Azandemno) மிக்க வந்தனம், நன்றி.

பெண்கள்: அடே உமக்கு சுவாஹிலி தெரியுமா? இஃது எங்கள் மொழியல்லவா?

நான்: நான் எந்த நாடு சென்றாலும் அதன் மொழிகள் சில வற்றைத் தெரிந்துகொள்வதுண்டு. இந்த நாட்டுமொழி சுவாகிலி (Swahili) அதில் சில சொற்களை இங்கே கழிவறைத் தோழரிடம் கற்றேன்.

இதற்குள் இரண்டு கெனியா வாலிபர் வந்தனர். அவர்கள் விமான நிலையத்தில் பயணிகளின் மூட்டைகளைச் சோதிப்பவர். என் பெட்டியையும் சோதித்துக் குறியிட்டு வைத்தனர். அவர்கள் நல்ல ஆங்கிலம் பேசினர். ஒரு பெண் ஒருவனைப் பார்த்துப் புன்னகை செய்து "இவர் இந்திய யோகி. எதிர் கால மெல்லாம் சொல்லுவார்" என்றாள்.

அவன்: அப்படியானால் இந்தப் பெண்ணுக்கு எப்போது கலியாணம் நடக்கும் சொல்லும்?

நான்: நல்ல காதலன் நிரம்ப அன்பைப் பொழியும்போது கைகள் சேரும்.

இருவரும் சிரித்துக் கொண்டனர்.

இன்னொரு பெண் இன்னோர் ஆண்மகனைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

நான்: வே வே யூ ஸானா (Ve Ve Yu Sana) (You are Very Good) நீங்கள் நல்ல நண்பர்.

அவர்கள்: அஃஜாண்டேம்னே (நன்றி, மகிழ்ச்சி)

இதற்குள் அந்த ஆண்மகன் என்னை வண்ணப்படம் பிடித்துப் படத்தை என் கையில் தந்து மகிழ்ந்தான். திடீர் காப்பி என்பதுபோல் திடீர் படம் வருகிறது.

நாங்கள் நெருங்கிய நண்பரானோம்.

கெனியாவைப் பற்றி அவர்களிடம் அளவளாவினேன். அவர்கள் நாட்டுப் படத்தைக் காட்டி, கெனியா வளமும் வரலாறும் சொன்னார்கள். பிறகு உந்து வண்டியில் என்னை ஊருக்குள் இட்டுச் சென்று சுற்றிக் காட்டினர். கெனியாவைப் பற்றி எல்லாம் அறிந்தேன். நான்கு மணி நேரத்தில் சுற்றிப்

பார்த்துப் பிறகு இரவிலும் என்னைச் சில இடங்களுக்கு அழைத்துச் சென்றனர். இரவில் நான் ஓய்வு கொள்ள அந்த ஆண்மக்கள் எனக்கு வசதி செய்தனர். பெண்கள் மாலை ஏழு மணிக்கே வீடு சென்றனர். காலை எழுந்ததும் அபாரிசுபேரி (A Bari Subari) நற்காலை நன்றாகுக! என்றேன். அவர்கள் என் குளிப்புக்கு வசதி செய்தனர். நான் தேய்த்து முழுகிப் புதியதணிந்து தியான வழிபாடு செய்தேன். "உங்கள் தூய வாழ்வு எங்களுக்குப் பிடித்திருக்கிறது. நாங்கள் இப்படி வாழ நீண்ட பழக்கம் வேண்டும்" என்றனர். கெனியர் பழக்க வழக்கமெல்லாம் நேரே கண்டறிந்ததைச் சொல்லுகிறேன்.

நைரோபி: கெனியாத் தலைநகர். இங்கே காலை மாலை ஒரு பாட்டுக் கேட்கும். ஏ முங்கு இங்குவுது (Eee Mungu Nguvu yetu) "எம்மைப் படைத்த கடவுளே" என்று நாட்டுப் பாட்டுத் தொடங்கும். கெனியர் கடவுளன்பும் நாட்டன்பும் கொண்டவர்கள். 88,47,000 கெனியர்கள் ஆங்கிலமும் நாட்டு மொழியான சுவாகிலியும் பேசுகிறார்கள். ஆங்கிலமே இணைப்பு மொழி. 2,24,960 சதுர மைல்கள் உள்ள இந்நாட்டை 1963 வரையில் சுமார் எழுபது ஆண்டுகள் ஆங்கிலேயரே அடக்கி ஆண்டனர். 1963ல் கெனியா விடுதலையானது.

கெனியாடா: அரசாட்சியில் தாய்மொழியான சுவாகிலி வளம்பெறப் பரவியது. கெனியாக்காரர் தமக்குள் சுவாகிலியே பேசுவார்கள். சுவாகிலி தெரியாதவர்களுடன் ஆங்கிலம் பேசுவார்கள். என்னைப் போலப் பிறநாட்டார் இரண்டொரு சுவாகிலிச் சொற்களைப் பேசினாலும் 'ஹ ஹ ஹ' என்று சிரித்துக் குதித்து மகிழ்வார்கள். தெற்கே தான்சீனியா, மேற்கே உகாண்டா, வடக்கே எதியோபியா, கிழக்கே இந்துக் கடல் சூழ்ந்த கெனியா ஏழு மாநிலங்களைக் கொண்டது. தலைநகர் நைரோபி. இதில் 2,66,794 மக்கள் வாழ்கிறார்கள். இதிலிருந்து 90 மைல் தொலைவில் **கெனியா மலை** (17,040 அடி) உள்ளது. நடுக்கோடு (Equator) இதன் வழியாகச் செல்லுகிறது. சுற்றிலும் வெப்ப நிலம். எனினும், கெனியாமலை பனிமுடி சூடியுள்ளது. அது கொடிய எரிமலையாயிருந்து அவிந்தது. எரிமலைக் கற்கள் சுற்றிலும் வீசிக் குவிந்துள்ளன. இம்மலையில் 12,000 அடி உயரம் வரையில் நீண்டுயர்ந்த மரங்கள் அடர்ந்துள்ளன. 15,000 அடிக்கு மேல் பனிமூட்டம். தான்ஜானியாவில் உள்ள **கிளிமாஞ்சரோ** மலையும் எரிமலையாயிருந்ததே. அது 19,340 அடி; கெனியா மலை அதற்கு அடுத்து உயர்ந்தது. இரண்டையும் கண்டுபிடித்தவர் ஜோஹன்லட்விக் (Johann Ladwig) என்ற ஜர்மன் பாதிரியாவார். (1849)

இந்த மலைக் காடுகளிலேதான் **மாவ்மாவ்** என்ற உரிமைப் போர் எழுந்தது. "கெனியா கெனியருக்கே" இங்கே பிறநாட்டு வெள்ளையர்க்கு இடமில்லை என்ற தன்மான இயக்கத்தை நடத்திய வீரர் **ஜோமோகெனியாடா** (Jomo Kenyatta) என்பவர். இவர் இலண்டனில் படித்தவர். 15 ஆண்டுகள் ஐரோப்பாவைச் சுற்றி உரிமை பெற்ற பிரான்சு, ரஷ்யா முதலிய நாடுகளில் பொது வாழ்வை ஊன்றி யறிந்தவர். நான் பெர்லின் அமைதி மாநாட்டிற் பேசியபோது இவரைப் பார்த்ததுண்டு. பத்து நண்பருடன் இவர் மாஸ்கோவுக்கு வந்தார். பிறகு சீனம் சென்று மேசேதுங்குடனும், சூஆன்லாயுடனும் உறவு கொண்டார். "மாவ்மாவ்" (MAV MAV) புரட்சி இயக்கத்தால் இவர் உரிமை உணர்ச்சியைக் கொழுந்தேறத் தூண்டிவிட்டார். "மாவ்மாவ்" வீரர் இரவில் புறப்பட்டு அன்னியரை வளைத்து வதைத்தனர். பலர் நாட்டை விட்டோடினர். இவரை வெள்ளையர் ஏழாண்டுகள் சிறையில் அடைத்து 1959இல் விடுதலை செய்தனர். கெனியாப்பிரிக்க ஒன்றியம் (Kenya African National Union KANU) என்ற நாட்டுரிமைச் சங்கம் கண்டு பெரும் புரட்சி செய்தார். 1963இல் முழு விடுதலை! கெனியா குடியரசானது. கெனியாடா முதன் மந்திரியாகிப் பிறகு நாட்டு முதல்வரானார். இவர் கெனியாவை ஏழு மாநிலங்களாகப் பிரித்தார். ஒவ்வொன்றிற்கும் தக்க உரிமையளித்தார். கெனிய மொழியை நாட்டு மொழியாக்கி ஆங்கிலத்தைத் துணை மொழியாக்கினர். பிறநாட்டார் அடித்த கொள்ளையை அறவே ஒழித்து நாட்டுக் கல்வி, தொழில், வாணிகம் எல்லாம் அலுவல்கள் எல்லாம் நாட்டினர் திறமையாலே முன்னேறச் செய்தார். கெனியாட்டாவிடம் பிற நாட்டார் வாலாட்ட முடியவில்லை. நம் இந்தியரும் அங்கே தொழில் நடத்திப் பொருள் குவித்தனர். நாடு குடியரசானதும் எங்கும் எல்லாம் நாட்டினர் கைவசம் ஆயின.

நாங்கள் உரிமை பெற்றோம்
நாட்டில் நன்மை உற்றோம்
எங்கள் தொழிலெங் கையில்
எங்கள் பணம் எம் பையில்

என்று கெனியர் பாடுகிறார்கள்.

கெனியர் இப்போது காலத்திற்கேற்ற கல்வி கற்கிறார்கள். விஞ்ஞானத் தொழில்முறை பயின்று நாட்டை வளப்படுத்துகிறார்கள். நாட்டில் உள்ள கனிப் பொருள்களை அகழ்ந்து பொன், வைரம், செம்பு, இரும்பு, ஈயம், தகரம், சோடியம்

எல்லாம் எடுத்து ஏற்றுமதிப் பொருள் குவிக்கிருர்கள். தோல், மரம் இவற்ருல் பல பொருள்கள் செய்கிருர்கள். நிலத்தைத் திருத்திப் பயிர் செய்கிருர்கள். முன்னே வெள்ளையருக்கு நல்ல வீடு, இடம், தோட்டம் கோட்டம், சீர் சிறப்புகள் இருந்தன. நாட்டினர் கறுப்பிருளில் புறமொதுங்கி அடிமைகளாகத் தாழ்ந்தனர். இப்போது நிறத்திமிர் ஒழிந்தது. பள்ளிக் கூடங்கள், தெருக்கள், அலுவலகங்கள் எங்கும் கெனியர். நிறச் சனியர் தொல்லையின்றி வாழுகிருர்கள். அவர்கள் நரம்பில் புதிய தெம்பு ஏறியிருக்கிறது. கடல் துறைமுகம், விமானம், புகைவண்டி நிலையம், உந்து வண்டி நிலையம் எல்லாம் செல்வம் பொழிகின்றன.

நைரோபியில் தலமேர் (De La Mere Avenue) பூஞ்சாலை யைக் கண்டு மகிழ்ந்தேன். நாட்டுப் படம் பார்த்து மகிழ்ந்தேன். மம்பாசா, பெம்பா, தாரே இஸ்லாம், மாலிந்தி, கிபினி, மோயால், நயான்சா, நாகுரு, நாகுமா, சான்சிபார், கிசுமு, எல்டோரெட், தீகா, நான்யூகி முதலிய இடங்கள் பார்க்கத் தக்க வளநகர்களாகும். நாட்டில் 92% சிற்றூர்ப்பாக்கம். 8% நகரப்பாக்கம். விக்டோரியா ஏரி, தொடால்ஃபிரரி, தாஞ ஆறு, சுத்தி ஆறு முதலியன நாட்டைப் பசும் பொலிவுறச் செய்கின்றன. முன்னே புறநாட்டினருக்கு உழைத்த வேர்வை யைச் சிந்தி, கெனியர் தமது தாய் நிலத்தைச் செழுமையாக்கி வளம்பெறத் தழைக்கின்றனர்.

கெனியர் கீகியு, மாசி, லூஓ, பண்டு—என்று பிரிந்திருப் பினும், கலப்பு மணத்தால் எல்லாரும் ஒன்ருகி நன்ருகி வருகின் றனர்.

கெனியர் நாட்டுச் சமயம் அனிமிசம்—இயற்கையிலும் ஆன்மாவைக் காண்பது. கிறிஸ்து மதம் இங்கே மிகப் பரவி யுள்ளது. கெனியப் பெண்களும் ஆண்களும் ஆங்கிலேயர் போலவே உடுக்கிருர்கள், உண்கிருர்கள், வீடமைத்து வாழு கிருர்கள், இளைஞர் காதலிக்கிருர்கள், பெற்ருேர் ஆசி பெற்றே மணக்கிருர்கள். மணமக்களைத் தனிக் குடித்தனம் வைக்கிருர்கள். களவியலும் கற்பியலும் அவர் வாழ்வில் விளங்கும்.

காலையில் பல நண்பர் என்னைச் சுற்றி உரையாடினர், உறவாடினர், பாடினர், நானும் பாடினேன். எனது ஆங்கிலப் பாட்டு அவர்களை ஆடச் செய்தது, தமிழ்ப் பாட்டைத் தாளம் போட்டுச் சுவைத்தனர். விமான நிலைய மேல்மாடியில் தனி

யறையில் பாட்டு நடந்தது. "வணக்கம், நல்லது, நன்றி, வாழ்க" என்ற நான்கு தமிழ் மொழிகளை அவர்கள் எழுதிக் கொண்டனர்.

காலை மணி ஒன்பது. குர்ர்ர்...டுர்....டுடுடுடு ...டுப் B.O.A.C. பிரிடிஸ்டி விமானம் இலண்டனிலிருந்து வத்து இறங்கித் தரையோடி நின்றது. "ஜோஹான்ஸ்பர்க்கு பயணிகள் தயார்" என்று பேச்சுக் குழல் அழைத்தது. மூட்டைகள் சோதிக்கப் பெற்றன. என்னை நண்பர் புன்னகையுடன் வழியனுப்பினர். ஒரு மின் கண்ணாடியால் உடம்பையும் பெட்டியையும் தடவுகின்றனர். அது ம்ம் என்று சத்தமிடுகிறது. ஏதாவது தங்கம் வெள்ளியிருந்தால் டக் என்று நிற்கிறது. உடனே சோதனை. நான்குபேர் தங்கக் கட்டிகள் ஒளித்து மாட்டிக் கொண்டனர். கெனியா காவல் வீரர் (Police) கண்ணுங் கருத்துமாக நாட்டுச் சட்டத்தைக் காக்கின்றனர்.

"பயணிகள் செல்க! ஆணை!"

நான் எனது நண்பரைப் பார்த்து வவாயூஸேனு—காவாஹ்ரி (You are very Good;. Good bye.) நீர் நல்லோர்—நல்விடை என்று விமானம் ஏறினேன்.

பிரிட்டிஷ் விமானம் மிக வசதியாயிருந்தது. அனைவரும் ஆங்கிலேயர். இருவர் நண்பராயினர். விமானத்தில் மிகமிக அன்புடன் எனக்குத் தக்காளிச் சாறு, ரொட்டி, கனிகள், பால், வெண்ணெய், அவித்த காய்கள், பழச்சாறு, நன்னீர் எல்லாம் அளித்தனர். காலை 10 மணிக்குப் புறப்பட்டு மூன்று மணிக்கு ஜோஹான்ஸ்பர்க்கு சேர்ந்தேன். (தொடரும்)

ஆங்கில மொழியின் உதவி

உலகமெங்கணும் நடைபெறும் வாணிகமெல்லாம் ஆங்கில மொழியின் உதவி கொண்டே நன்கு நடைபெறுதலை அறிந்து வைத்தும், அதனைப் பொது மொழியாக வழங்காமல், விரிந்த வாணிக வாழ்க்கைக்கு ஒருசிறிதும் பயன்படாத இந்தியைப் பொது மொழியாக்க முயல்வோர் நம்மனோர்க்கு உண்மையில் உதவி செய்பவர் ஆவரோ? கூர்ந்து பார்மின்கள்.

—மறைமலையடிகள்

"இந்தி பொது மொழியா? பக். 40

ஓங்காரத்தின் உண்மை

[என். கே. வேலன்]

ஆத்திக சமாசத்தின் ஆதரவில் சொற்பொழிவாற்றிய சங்க இலக்கியப் புலவர் திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள் வடமொழியிலுள்ள ஓங்காரத்தைத் தமிழ்மொழி கடன் வாங்கியதெனக் கூறினர்.

'தோடுடைய செவியன்' என்று தொடங்கும் தேவாரத்தில் திருஞானசம்பந்தர் வடமொழியிலுள்ள ஓங்காரத்தை எடுத்து முதலில் வைத்திருக்கின்றார் எனப் பேசினர்.

"ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

என்னும் கந்தரநுபூதிப் பாடலில் 'ஆடும்' என்ற சொல்லில் அ+உ+ம் என வருகின்றது. அருணகிரியார் வடமொழியிலிருக்கும் ஓங்காரத்தையே எடுத்து முதற்பாட்டில் வைத்துப் போற்றியுள்ளார் எனவும் கூறினர்.

தமிழின் அருமை பெருமைகளை நன்குணர்ந்த ஐயர் அவர்கள் ஏன் இப்படிப் பேசுகின்றார் என்பது விளங்கவில்லை. எம்மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு என்பது அவருக்குத் தெரியாதா? திருமூலர் திருமந்திரத்தை மறந்து விட்டாரா?

"ஓமெனு மோங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனு மோங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனு மோங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனு மோங்கார மொண்முத்தி சித்தியே" —திருமந்திரம்

"ஓங்காரமா மைந்தெழுத்தாற் புவனத்தை யுண்டுபண்ணிப்
பாங்காய் நடத்தும் பொருளே யகண்ட சிவமே"

எனத் தாயுமானரும் பாடுகின்றார்.

தமிழ்ப் பேரறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் தமிழ் எழுத்துக்களை நுண்மையாக ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டு பிடித்திருக்கின்றார்.

நூற்றெண்பது டிகிரி சுழற்றினல் ஓகரம் அகரமாவதையும் அகரம் ஓகரமாவதையும் விளக்கிக் காட்டுகின்றார்.

பிரணவத்தின் பகுதிகளை அகரம் தன்னகத்தே அடக்கிக் கொண்டிருக்கின்றது எனத் திரு நாயக்கர் விளக்குகின்றார். அகரத்தை அ, உ, ம் என முப்பகுதிகளாகப் பிரித்துக் காட்டுகிறார்.

அறிஞர் நாயக்கர் அகர எழுத்துக்களைப் பகுத்தெடுத்து அவற்றை வேறுவகையாகத் திருப்பியமைத்து மூலமந்திரங்களைத் தோற்றுவிக்கின்றார்.

தாயுமானவர் யாவற்றினும் உயர்ந்த பொருளை அகர உயிருக்கு ஒப்பிடுகின்றார். அவ்வுயிர் எல்லா வெழுத்தையுமாக்கி அவற்றினின்றும் வேறுபட்டு நிற்குமெனப் பாடுகின்றார்.

"அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறு
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்து மாகி
பகர்வனவெல் லாமாகி யல்ல தாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகி" —தாயுமானவர்

சிவஞான சித்தியாரில் அகரம் சிவபெருமானுக்கு உவமையாக்கப் படுகின்றது.

"அக்கரங்கடோறும் சென்றிடு மகரம்போல நின்றனன்
சிவனுஞ் சேர்ந்தே"

என்பது பாடல். திருவருட்பயனில்,

"அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கு நிறைந்து"

எனக் கூறப்பட்டிருக்கின்றது.

ஆலமர் கடவுள் (தட்சிணாமூர்த்த) வடிவத்தில் ஓகரத்தின் சாயல் தெரிவதை ஆராய்ச்சியாளர்கள் படம் வரைந்து காட்டியுள்ளனர். ஓகரத்தை அகரமாக்கும்போது சிவனது இடக்கால் மேலே தூக்கப் பட்டு நிற்குமாயின் அது கூத்தப்பிரானின் வடிவமாகின்றது.

ஓகரம் இயற்கை வடிவங்களோடு ஒத்திருப்பதைப் பார்க்கலாம். மனிதனுடைய மூளையைப் பகுத்துப் பார்த்தால் ஓகர எழுத்துப் புலப் படுகின்றது. குடல்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஓகரவடிவமாக நிற்கின்றன. கருவளர்ச்சியிலும் ஓகரவடிவம் தெரிகின்றது.

தமிழ்மொழி மிகச் சிறந்த முறையில் அமைக்கப் பட்டிருக்கின்றது. தமிழ் எழுத்துக்களின் உருமாற்றமும் மொழியின் அமைப்பும் மறைத்தன்மை வாய்ந்தவை என்பதை எவராலும் மறுக்க முடியாது. ஓங்காரத்தை வடமொழியிலிருந்து கடன் வாங்கியதாகச் சங்கத்தமிழ் கற்றுப் புலவர் பட்டமும், முதற் பரிசும் பெற்ற திரு. ஐயர் அவர்கள் கூறுவது நமக்கு வியப்பைத் தருகின்றது.

ஒருமொழிக்கு ஏற்றமளிப்பதற்காக நமது அருமைத் தமிழ் மொழியைக் குறைத்துப் பேசலாமா? பாரதியார் கூறியபடி,

"நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்"

எனக் கேட்போம். வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி என வாழ்த்துவோம்.

குறிப்பு: தனித்தமிழ்த் தந்தை மறைத்திரு மறைமலையடிகள் எழுதிய 'ஓங்கார உண்மை' என்னும் நூலைக் கற்றுத் தெளிவு பெறுக!

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை நாடகப் போட்டி நாடகங்கள்

(ஓர் ஆய்வு)

[தாயம்மாள் அறவாணன், எம்.ஏ.,

துணைத்தமிழ்ப் பேராசிரியை,

பச்சையப்பன் மகளிர் கல்லூரி, சென்னை.]

தமிழே கழகம் ; கழகமே தமிழ் :

முத்தமிழில் நாடகத் தமிழே மூத்த தமிழ்; முதன்மைத் தமிழ். காலப் பழைமை நாடகத் தமிழுக்கு இருந்தாலும் நிரம்ப நாடகங்கள் தமிழில் இல்லையே என்ற கவலை உண்டு. இதற்குக் காரணம் சமுதாய வேலியாக இருக்க வேண்டிய நாடகங்கள் ஒரு காலத்தில் சமுதாய அறப் பயிரையே மேய்ந்தமையால் தமிழ்ச் சான்றோர்கள் நாடகத்தின் வேகத்தை மட்டுப்படுத்தினார்கள் ; கட்டுப்படுத்தினார்கள். பொதுமக்க ளோடு நெருக்க உறவுகொண்ட கலை என்பதால் மாந்தர் தம்மை ஆக்கவும் போக்கவும் கூடிய கூர்முனைக் கத்தியாக நாடகம் அமைந்துவிடுகிறது. பண்பற்றோர் பயன்படுத்தும் போது கத்தி பண்புடைமையைப் பழுது பார்க்கிறது. அந்தக் கட்டத்தில் கத்தியே வேண்டாம் என்று கருதியதன் விளைவு தான் இடைக்காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட நாடக எதிர்ப்புக்கும் நாடக இளைப்புக்கும் காரணங்கள்.

இன்றைய உலகம் பொதுமக்கள் உலகம். பொது மக்களோடு அன்றாடம் அணுக்கத் தொடர்பு கொண்ட கலைகளுள் தலையாய கலை நாடகக்கலை. ஆதலால், நாடகம் பல்கி மல்கவேண்டும் என்பதில் எல்லார்க்கும் விழைவு உண்டு ; வேட்கை உண்டு. ஆனால், 'நாடகத் தமிழ்', 'நாடக இலக்கியத் தமிழ்' வளர்ந்து தழைக்க வேண்டும் என்பது நல்லவர்களின் நோக்கு. சைவசித்தாந்தக் கழகம் தமிழ் காக்கத் தன்னை ஒப்புக் கொடுத்த நிறுவனம். நாடகத்தைப் பெருக்குவதைக் காட்டிலும், நாடக இலக்கியத் தமிழைப் பெருக்கித் துலக்குவது அதன் பொறுப்பு ! அந்தப் பொறுப்பின் விளைவே 'மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை நினைவு நாடகப் போட்டி !'

பதின்மூன்று நாடகங்கள் போட்டிக்கு அனுப்பப் பட்டிருந்தன. இவற்றில் பத்து நாடகங்கள் வரலாற்றை

அடிப்படையாகவும் எஞ்சியவை நிகழ்காலத்தைக் கருவாகவும் கொண்டவை. சங்ககாலப் பெண்பாற் புலவர் நக்கண்ணையார் பற்றி இரண்டும், சைவச் செல்வி திலகவதியார் பற்றி ஒன்றுமாக வந்துள நாடகங்களுள் மூன்று அமைந்திருந்தன. பதின் மூன்றில் இன்பியல் நாடகங்கள் ஐந்து, துன்பியல் நாடகங்கள் ஆறு; இன்பமும் துன்பமும் கலந்த நாடகங்கள் இரண்டு. தற்கால மனிதப் போக்கு மேலைநாட்டைப்போல் துன்பியல் நாடகங்களையே விரும்புகின்றது என்பதை நாடக முடிவால் ஒருவாறு ஊகிக்க முடிகிறது.

அம்பலமும் அந்தரங்கமும் :

பழந்தமிழர், பாடப்பட வேண்டாப் பொருள் எனவும், கூறப்படக் கூடாக் கரு எனவும் சிலவற்றை ஒதுக்கிவைத்தனர். அப் பெருந்திணை, கைக்கிளைகள் வாழ்வில் இடம் பெருக் கற்பனைகள் என்பதல்ல காரணம். அவை அம்பலம் ஏற்றப்படக் கூடா அந்தரங்கங்கள் என்று கருதினர். இன்று அந்தரங் கங்கள் அம்பலம் ஏறுகின்றன. இன்று உதட்டளவில் உண்மை (Realism) பேசுவோரின் விலைபோகும் கலையாகத் தன்மை நவிற்சி என்ற போர்வையில் வேண்டாப் பகுதிகள் விளம்பரம் பெறுமானல் சமுதாய நெறி நாளடைவில் நெரித்துக் கொல்லப்படும்.

காமுகன் கற்பழித்தல், காதலில் தோல்வி அடைதல், அதற்காக ஏங்குதல், கொலை செய்தல், பொய்க்கடிதம் எழுதி, பின் உணர்ந்து நஞ்சுண்டு சாதல், பொருமை, வஞ்சகம், சூழ்ச்சி, பழிக்குப்பழி வாங்கல், ஐந்தாம் தாரமாக மணம் முடிக்கப்பெற்ற பெண் வேறு ஒருவனைத் தேடிப் பின் அவனுட னும் வாழாது பின் வேறு ஒரு பண முதலாளியுடனும் வாழ்ந்து கொலை செய்யப்படுதல், பேய்ப்பாத்திரங்களின் வருகை, அண்ணனுக்குரிய பெண்ணைத் தம்பி மணமுடிக்க எண்ணி அண்ணனைக் கொலைசெய்து முடிவில் தானும் இறத்தல் ஆகியவை நாடகங்களின் கருவாக அமைவதைக் காணலாம்.

துட்டரைக் கண்டு தூர விலகு :

எந்த நாடகத்திலும் நாடகத் தலைவனுக்கு (Hero) எதிரே ஒரு தீக்குணன் (Villain) தோன்றிப் பின் அழிவதாகவேனும், தன் தீச்செய்கை நினைந்து திருந்துவதாகவேனும் கதையில் அமைத்தல் வேண்டும். அப்பொழுதுதான் கதைக்கு ஒரு விறுவிறுப்பும் நெகிழ்ச்சியும் அமையும். இங்கு வந்துள

நாடகங்களுள் இரண்டைத் தவிர எஞ்சியவை, 'துட்டரைக்கண்டு தூர' விலக்காமலும், விலகாமலும் அமைந்தவை.

அறத்தினது இறுதி வாழ்நாட்கு இறுதி !

நாடகங்கள் வாழ்க்கையில் பின்பற்றும் நல்லனவற்றைக் கொண்டமைதல் வேண்டும். வஞ்சகம், சூழ்ச்சி, பொய், பொருமை இவை நிலையாது தோற்கத்தான் செய்யும்; அவற்றிற்கு முடிவுகாலம் உண்டு என்பதை அறிவுறுத்தும் பாங்கில் பெரும்பான்மை நாடகங்கள் அமைந்திருந்தன.

தொல்காப்பியம், குறள், நாலடி நூல்களின் மேற்கோள்கள், முது பழமொழிகள் ஆகிய இவற்றை ஆங்காங்கே கையாண்டு எழுதியிருக்கும் நாடக ஆசிரியர்கள் சிலரின் உழைப்புப் போற்றத்தக்கது.

ஒருசில நாடகங்களில் உவமை, நடை, யாப்பமைதி போன்றவை சிறந்து விளங்கின.

ஒரு நாடகத்தில் சிலேடைப் பொருளும் நடை நயமும் சிறப்புற இருப்பினும் பெண்மையின் கற்பை அழித்தல் போன்ற தற்காலப் 'புது அலைப்' பாங்கும் மோதுகின்றது.

இசைப் பாங்கினதாய்ப் பல பகுதிகள் ஓரிரு நாடகங்களில் அமைந்திருந்தன. இவை இசையால் தமிழ் பரப்புவதாயிருந்தன.

மேற்கூறப்பெற்ற சிறப்பியல்புகள் போட்டிக்கு வந்த நாடகங்கள் ஒருசிலவற்றில் ஆங்காங்கு அமைந்திருந்தன.

போட்டியில் சிறந்த நாடகமென ஒருமனதாகக் குழுவினரால் தெரிந்தெடுக்கப்பெற்ற நாடகம் 'அனிச்ச அடி' என்பதாகும். 'பெண் கொலைபுரிந்த நன்னன்' என்ற குறுந்தொகை அடிதான் இந் நாடக உருவாக்கத்திற்குக் காரணம். வரலாற்றுப் போக்கில் அமையப்பெற்ற இது துன்பியல் நாடகம் ஆகும். சிறந்த கதைப் போக்குடன் இந் நாடகத்தில் நெஞ்சைத் தொடும் இடங்கள் பல உள்ளன.

'பெண்கொலை புரிந்த நன்னன்' என்ற அடியின் வழி நன்னனை மிகக் கொடியவன், பெண் என்றும் பாராது மாங்கனியொன்றைத் தின்றதற்காக அப்பேதையைக் கொன்று பெண் பழியேற்றவன் என்ற எண்ணத்தில் நம்பிக்கை கொண்ட நமக்கு 'நன்னன் நல்லவன், பெண் கொலையுண்டதற்கு

அவனுடைய படைத்தலைவனே காரணம்' என்ற போக்கில் கதையையே மாற்றி நாடக ஆசிரியர் இதுவரை யாரும் எண்ணாத வகையில் நன்னனை நல்லவனாக்கிக் காட்டுகிறார். அதற்கேற்ற வகையில் நாடகக் கதையில் நம்புதற்குரிய வகையில் பல்வேறு திருப்பங்களைச் செய்து காட்டியுள்ளார்.

நாடகம் ஆற்றொழுக்கான நடையாலானது. முன்னோர் மொழிகளை ஆங்காங்கே பெய்து நாடகத்திற்குப் பல்வகையான இலக்கியச் சிறப்புகளை ஏற்றியுள்ளார்.

வரலாற்றுமுறை நாடகமாதலின் அக்காலத்தில் வாழ்ந்த மன்னர்களையும் அவர்களுடைய போர்முறைகளையும் நாடக ஆசிரியர் முறை பிறழாது எடுத்துக்காட்டியுள்ளார்.

மொத்தத்தில் போட்டிக்கு வந்திருந்த நாடகங்கள் அனைத்தும் வண்ண வகையில் வேறுபட்டிருந்தாலும் தமிழ் எண்ண வகையில் ஒன்றுபட்டு ஒன்றிவிட்டவையேயாம்.

தமிழ் நாடகம் அழிந்த வரலாறு

பண்டைத் தமிழ் மொழிக்கண் இயற்றப்பட்ட நாடகக் காப்பியங்களும், அக்காப்பிய இலக்கணங் கூறும் நாடகத் தமிழ் நூல்களுஞ் சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் காலத்திலேயே ஐயகோ! இறந்து போயின! அவை அங்ஙனம் இறந்துபட்டது எதனாலெனிற் கூறுதும்: இசை நாடகங்களை அருவருப்பாரான பௌத்த சமண் சமயத்தவர்கள் வடநாட்டினின்றும் பெருந் திரளாய்ப் போந்து இத் தமிழ்நாடெங்கணுங் குடி புகுந்து வைகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல், அவர்தங் கோட்பாடுகளிற் சிக்குண்ட தமிழாசிரியர்களும் அவர்போல் அவற்றை அருவருத்து விடவே அந்நூல்களெல்லாம் அங்ஙனம் அழிந்துபடலாயின!

இங்ஙனந் தம் நாட்டுட்புகும் அயலவர் ஒழுகலாறுகள் எத்திறத்தவாய் இருப்பினும் அவை தம்மை ஆராயாது கைப் பற்றித், தமக்குரிய சீர்த்த பண்டையுரிமைகளையெல்லாம் எளிதில் இழந்துவிடுதற்கண் முன் நிற்பாரான நந்தமிழ் மக்களிடையே இசை நாடகத் தமிழ் இறந்துபட்டது இயல்பேயன்றோ?

சாகுந்தல நாடக ஆராய்ச்சி பக். கஙு

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை
ரூ. 1000 பரிசு நாடகப் போட்டி முடிவு

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய 'மனோன்மணீயம்' போன்ற சிறந்த இலக்கிய நாடகம் அதற்குப்பின் தோன்றவில்லை என்ற குறையை ஓரளவு போக்குதற்கும், புதிதாக இலக்கிய நாடகம் எழுதற்கும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1971 ஆம் ஆண்டில் ரூ 1000/- பரிசு கொண்ட கவிதை நாடகப் போட்டியைத் தோற்றுவித்தது.

சிறந்த பிறநாட்டுக் கதைகளையோ தமிழ்நாட்டுக் கதைகளையோ அடிப்படையாகவைத்து, தமிழ்நாட்டு வரலாற்றுப் போர்வைகொடுத்துக் கதையினைச் சுவைபெற அமைத்து உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்றும், தொல்காப்பிய முதல் பிற்கால இலக்கியங்கள் முதலியவற்றிலிருந்து தொகுக்கப் பெற்ற பழமொழி, உவமை, சிலேடை முதலியன நாடகத்தில் ஆங்காங்கு மிளிர்தல் வேண்டும் என்றும், தற்கால அறிவியல் கருத்துக்கள் சிலவும் அமைதல் வேண்டுமென்றும் கழகம் விதிகளை வகுத்திருந்தது.

போட்டிக்கு வந்த 13 நாடகங்களைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர். ந. சஞ்சீவி, எம்.ஏ., எம்.லிட்., பிஎச். டி. அவர்கள் தலைமையில் அமைந்த பன்னிருவர் கொண்ட குழு சீர்தூக்கிப் பார்த்துப் புலவர் திரு. ஆ. பழனி அவர்கள் எழுதிய 'அனிச்ச அடி' என்ற நாடகத்தினை ஒருமனதாகப் பரிசுக்குரிய நாடகமாகத் தேர்ந்தெடுத்தது.

குழு உறுப்பினர்கள் வருமாறு: அவ்வை தி. க. சண்முகம், தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை, திரு. தி. க. பகவதி, எம். எல். சி., கவிஞர் எஸ். டி. சுந்தரம், டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், எம். ஏ., எம். லிட்., பிஎச். டி., திரு. இரா. கலியாணசுந்தரம் பி. எஸ்சி., டாக்டர் இரா. குமரவேலு, எம். ஏ., எம்.லிட்., பிஎச். டி. திரு. க. ப. அறவாணன், எம்.ஏ., பி. ஓ. எல்., கவிஞர் தணிகை உலகநாதன், திருமதி தாயம்மாள் அறவாணன், எம். ஏ., திரு இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி. லிப்.

திரு. ஆ. பழனிவேளாண்மையைத் தொழிலாகக் கொண்ட குடும்பத்தில் காரைக்குடியில் 7—11—1931 இல் தோன்றியவர். இருபத்தாறும் அகவையில் மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ் பயின்று தேர்ச்சிபெற்றார். கடந்த ஒன்பது ஆண்டுகளாகக் காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகின்றார். திருப்பத்தூர் வட்டத் தமிழாசிரியர் கழகச் செயலராகக் கடந்த ஈராண்டுகளாகத் திகழ்கிறார்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடத்திய 'திருக்குறள் புத்துரைப் போட்டி'யில் பரிசு பெற்றுள்ளார். இவர் எழுதிய 'அன்னிஞிமிலி' என்னும் நாடகம் தமிழகத் தமிழாசிரியர் கழகம் நடத்திய செய்யுள் நாடகப் போட்டியில் பரிசு பெற்றுள்ளது.

"அனிச்ச அடி"

(நாடகக் கதைச் சுருக்கம்)

சேரனின் படைத்தலைவன் எயினன். அவன் மகள் சுரும்பார் குழலி அருளாழி என்பானை மணந்து வாழும் நாளில், ஒருநாள் அருளாழி தன் மனையாளுடன் நன்னன் பிறந்தநாள் விழாக்காண நறவு பட்டினம் செல்கிறான்.

நன்னன் படைத்தலைவன் ஞிமிலி, சுரும்பார் குழலியை மணக்க விரும்பித் தோல்வியுற்றவனாகையால் அவனிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி அவள் தந்தை எயினன் தன் மகளுக்கு அறிவுறுத்துகிறான்.

நறவு பட்டினத்தில் ஆற்றில் குளிக்கச் சென்ற சுரும்பார் குழலி அவ்வாற்றில் ஒரு மாங்கனி மிதந்து வரக் கண்டு அதனை எடுக்கிறாள். ஆனால் அது நன்னன் தோட்டத்து மாங்கனி என்பதையும், அதனை யாரும் உண்ணக்கூடாது என்பதனையும் அவள் அறியாள். எனவே, கனியை உண்டாள். இதன் காரணமாக அவள் குற்றவாளியாகி அவைக் களத்துக்குக் கொண்டுவரப்படுகிறாள்.

ஞிமிலியின் வஞ்சக வலையினின்று தப்பத் தன் பெயரை 'தாமரை' என மாற்றிக் கூறுகிறாள் சுரும்பார் குழலி. எனினும் ஞிமிலி, இவள் சுரும்பார் குழலியே எனவும், ஒற்றாட வந்திருக்கிறாள் எனவும் மன்னனுக்கு எடுத்துக்கூறி அவளைக் கொலைத் தண்டனைக்குட் படுத்துகிறான்.

சுரும்பார் குழலியை இழந்த அருளாழி ஞிமிலியைக் கொல்வ தென்றும் நன்னனின் மாந்தோப்பை அழிப்பதென்றும் சூளுரைக்கிறான். மாந்தோப்பை அழிக்க நன்னனின் யானைக்கு மருந்திட்டான். யானை வெறி கொள்கிறது. ஆனால், அவ்வெறிச் செயலுக்கு அருளாழியும் ஆட்பட்டுக் காயமுறுகிறான்.

இந்நிலையில் தன் மகளின் முடிவு கேட்டு எயினன் நன்னன் நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அப்போரில் மடிகிறான். யானையால் காயமுற்ற அருளாழிக்குக் கணியன்கிரன் என்பான் உதவி செய்கிறான். அவன் மகள் அனிச்சஅடி அருளாழிக்கு ஆறுதல் கூறுகிறாள்.

சேரர் படை தோற்றதால் சேர நாட்டின்மீது படையெடுக்கு மாறு நன்னனுக்குக் கூறுகிறான் ஞிமிலி.

அதே நேரத்தில் நன்னனைத் தாக்க நார்முடிச்சேரல் திட்டமிடுகிறான். நன்னனின் கடற்படைவலியைக் காணக் கடற்கரைக்குச் சென்ற அருளாழி அனிச்ச அடியைக் கண்டு பேசுகிறான். அப்போது அனிச்ச அடியைப் பகைவன் வாளால் தாக்குகிறான். அவளைக் காப்பாற்றிப் புலவர் பரணரிடம் ஒப்படைத்துவிட்டுப் போருக்குச் செல்கிறான் அருளாழி.

போர்க்களத்தில் அருளாழி ஞிமிலியைக் கொல்கிறான். இச்செய்தி கேட்டு அளவுக்கு மீறிய மகிழ்ச்சி கொண்ட அனிச்ச அடி அதிர்ச் சியால் மடிகிறாள். அருளாழி வெற்றி பெற்றானாயினும் அனிச்சத்தின் முடிவு கேட்டு மயங்கி விழுந்து உயிர் துறக்கிறான்.

நான்கு கழக நூல்களுக்குத் தமிழக அரசுப் பரிசு

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் சார்பில் சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளிக்கும் விழா இம்மாதம் 7 ஆம் நாள் மாலை சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. கல்வி யமைச்சர் மாண்புமிகு டாக்டர். நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாவிற்குத் தலைமைதாங்க, முதல்வர் டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பரிசுத் தொகையையும், பாராட்டிதழையும் வழங்கி நூலாசிரியர்களையும் பதிப்பாளர்களையும் பாராட்டினார்.

தலைமை தாங்கிய கல்வியமைச்சர் அவர்கள் தம் உரையில் நடுவணரசு 'கடந்த ஐந்தாண்டு காலத்தில் இந்தி மொழி வளர்ச்சிக்கு ரூ. 20 கோடியும், தமிழ் மொழிக்கு ரூ. 1 கோடியும் செலவிட்டுளது என்று குறிப்பிட்டார்.

பரிசு வழங்கிய முதல்வர் அவர்கள் 'தொன்மை, வலிமை, வனப்பு, வளம் ஆகிய சிறப்புகள் கொண்ட தமிழ் மொழி போன்ற மாநில மொழிகள்மீது நடுவணரசு போதுமான அக்கறை செலுத்தவில்லை. அவர்கள் அக்கறை செலுத்தவேண்டு'மென்றார்.

மேலும் 'இந்தியாவில் உள்ள தமிழ்மொழி தவிர மற்ற 13 மொழி களிலும் வெளியாகியுள்ள கல்லூரிப் பாட மொழிப் புத்தகங்கள் 650. தமிழ் மொழியில் மட்டும் 450 புத்தகங்கள் வந்துள்ளன. இது தவிர நடுவண் அரசு உதவியும் கிடைத்தால் இன்னும் சிறப்பான செயல்களைச் செய்ய முடியும்' என்றும் முதல்வர் கூறினார்.

பரிசு பெற்ற நூலாசிரியர்களைப் பாராட்டியதோடு பரிசுபெற்ற நூல்களை வெளியிட்ட பதிப்பகத்தார்களையும் அவர் பாராட்டினார். விற்பனை ஒன்றையே குறிக்கோளாகக் கருதாது இத்தகைய அறிவு நூல்களை வெளியிட்ட பதிப்பகத்தார்கள் மிகவும் பாராட்டுக்குரியவர்கள் என்றார்.

கட்டுரை, சிறுகதை முதலிய பதினெட்டுத் தலைப்புகளில் வெளிவந்த முப்பத்தொன்பது நூல்கள் பரிசு பெற்றன. முதல் பரிசு ரூ. 2000. இரண்டாம் பரிசு ரூ. 1000.

இவற்றுள் கழக நூல்கள் நான்குக்குப் பரிசுகள் கிடைத்தன. ஒரு நூலுக்கு முதல் பரிசும், மூன்று நூல்களுக்கு இரண்டாம் பரிசும் கிடைத்தன.

முதல் பரிசு : 'சட்டத் தமிழ்'— திரு. மா. சண்முக சுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்.

இரண்டாம் பரிசு : 'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்'— திரு. பி. எல். சாமி, பி. எஸ்ஸி.

தமிழக-சாவகக் கலைத் தொடர்புகள்—திரு. அ. இராகவன்.

கொசு ஒழிப்பு—திரு. க. வ. முத்தையா, எம்.ஏ.

கழக நூலாசிரியர் நால்வரும் பரிசளிப்பு விழாவில் நேரில் கலந்து கொண்டு முதல்வரிடமிருந்து பரிசையும், பாராட்டிதழையும் பெற்றனர்.

பதிப்பகத்தார்க்குரிய நான்கு சான்றிதழ்களையுங் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் கழக நூல்கட்காகப் பெற்றார்கள்.

1968 க்கு முன் நூலாசிரியர்கட்கு மட்டுமே பரிசுத் தொகையும் சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன. கழக ஆட்சியாளர் அவர்கள் தாம் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்கட்கும் எழுதிப் பரிசு பெறும் நூல்களை வெளியிடும் பதிப்பகத்தார்கட்கும் சான்றிதழ்கள் வழங்குதல் வேண்டுமென்று வேண்டினார்கள். அவர்கள் வேண்டுதலின் பேரிலேயே அவ்வாண்டு முதல் பதிப்பகத்தார்கட்குச் சான்றிதழ்கள் வழங்கப் பெறுகின்றன.

———

திருவாசகமணியின் ஒப்பற்ற சாதனை !
ஆங்கிலத்தில் திருக்குறள் !!
ஆங்கில அரச குருவுக்கு அன்பளிப்பு !!!

2000 ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் தமிழில் இயற்றிய திருக்குறள் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களால் அருமையான ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இத் திருக்குறள் நூல் ஒன்றைத் "திருவாசகமணி பிரசாரக்குழு"வின் அமைப்பாளரும் தமிழ்நாடு உயர்நீதிமன்ற வழக்கறிஞரும் ஆகிய சுத்தமல்லி திரு. மீ. சுப்பையா பிரிட்டிஷ் காண்டர்பரி ஆர்ச் பிஷப், டாக்டர். மைக்கேல் ராம்சே அவர்களுக்குச் சென்னையில் மார்ச்சுத்திங்கள் 5 ஆம் நாள் அன்பளிப்பாக வழங்கினார்.

திருவாசகமணியின் ஆங்கிலப் புலமை, திருக்குறளின் சிறப்பு, தமிழின்தொன்மை, தமிழர் பண்பாட்டின் உயர்வு அனைத்தையும் ஆங்கில ஆர்ச் பிஷப் வியந்து பாராட்டினார்.

———

" தீரா மயக்கமோ தெளியாத நித்திரையோ "

தமிழக நாட்டுப் பாடல்களில் இதுவரை நன்கு ஆராயப் படாத ஒரு துறை உண்டென்றால் அஃது ஒப்பாரிப் பாடல் துறையேயாகும். ஒப்பாரிப் பாடல் எழக்கூடிய இடம் உயிர் பிரிவுற்ற துக்க வீடாக இருக்கலாம். ஆனால், அப்பாடலில் உயிர் நிரம்ப உண்டு. கற்பனை வளமுண்டு. உணர்ச்சிக் கொந்தளிப்புண்டு. அதில் தத்துவம் ததும்பும்.

ஒரு வீட்டில், கணவன் பிரிவு தாங்காது அரற்றுகிறாள் மனைவி. 'உறங்குவது போலும் சாக்காடு' என்பதற்கொப்ப இறந்துபோன தன் கணவனைப் பார்த்துப் பாடுகிறாள் :

"ஐயா உங்களுக்குத்
தீரா மயக்கமோ தெளியாத நித்திரையோ"

என்று. உலகம் போற்றும் தமிழ் மறை நூலைத்தந்த வள்ளுவன் தான் சாக்காட்டிற்கு உறக்கத்தை உவமை கூறினான் என்றால் ஒருவித தத்துவமும் அறியாத ஒரு நாட்டுப்புறத் தமிழ் மகளும் தன் கணவன் சாக்காட்டை உறக்கத்தோடு ஒப்பிட்டுப் பாடுகிறாள்.

இதன் இலக்கியச் சுவையை எடுத்துக் காட்டுதற்குத் **திரு. க. சி. கமலையா** எழுதிய கட்டுரையே **'நமது பண்பாடு'** என்பதாகும். அதே தலைப்பில் அவருடைய கட்டுரைத் தொகுப்பு அண்மையில் நூல்வடிவில் வெளிவந்துள்ளது. இத்தகைய அவலச்சுவை நிறைந்த ஒப்பாரிப் பாடல்களைத் தொகுப்பதற்கு அவர் கட்டுரை தூண்டுகோலாகவும் வழிகாட்டி யாகவும் இருக்குமெனக் கூறலாம்.

திராவிடப் பழங்குடியினரின் முன்னோடி போன்று திகழும் தோடர்கள் நடைமுறையில் பாடிவரும் நாட்டுப் பாடல்களைத் தொகுத்து அவற்றுக்குரிய ஆங்கில மொழிபெயர்ப்புடன் 1050 பக்கங்களில் ரூ. 220 விலையில் அண்மையில் வெளி யிட்டுள்ள டாக்டர் எம். பி. எமனோ 'தோடர் பாடல்கள்'* என்ற அந்நூலில் 245 பாடல்களைத் தொகுத்துள்ளார். அதில் 90 பாடல்கள் மேற்கண்டது போன்ற அவலச்சுவை நிறைந்த ஒப்பாரிப் பாடல்கள்.

---

*Toda Songs. M. B. Emeneau 1971. x/viii, 1004 p. Rs. 220-00.

தோடர்களின் ஒப்பாரிப் பாடல்களைப்பற்றி டாக்டர் ஆர். இ. ஆஷர் எழுதியுள்ள குறிப்புத் தமிழ்ப் பாடல்களுக்குச் சிறு அளவே பொருந்துமாயினும் அதனை இங்கே தருதல் நல்லது.

"The most elaborate ceremonial occasions are funerals. The body will be cremated at a first funeral from which certain relics are saved for burning at a second funeral.

It is for these ceremonies that most of the songs are composed; dance songs to accompany the dancing that follows the first funeral, and funeral laments for the second one. In a lament, a composer puts himself in the place of one near to the deceased and sings on his behalf about events and achievements in the life of the person mourned.

தமிழகத்தின் தென்பகுதியில் மேல் குறிப்பிடப்பட்டுள்ள சில செய்திகளை நடைமுறையில் காணலாம். ஒருவர் இறந்து விட்டால் உறவுப் பெண்கள் அனைவரும் கூடித் தத்தம் உறவு முறையை வைத்து இறந்தவர்களின் பெருமைகளையும் செயல் களையும் கோவையாக எடுத்துக்கூறிப் பாடுவதுண்டு. ஏழாம் நாள் 'கிழமை' என்ற பெயரில் இறந்துபோனவர் விரும்பிய பண்டங்களைச் செய்துவைத்துப் பெண்கள் முற்றத்தில் கைகோத்துச் சுற்றிச்சுற்றி வந்து அழுவதுண்டு. நாகரிகம் வேகமாக முன்னேறி வருகின்ற இக்காலத்தில் இப் பழக்க வழக்கங்கள் மறைந்து வருகின்றன.

ஏறத்தாழ ஆயிரத்துக்குட்பட்ட மக்கள் தொகையுடைய தோடர்களின் மொழியிலேயே 90 பாடல்கள் இருக்குமானல் தமிழ் மொழியில் எத்தனையோ பாடல்கள் கிடைக்கும். இந்தக் காலத்தில்கூட இதைத் தொகுக்காது விட்டுவிடின் எதிர் காலத்தில் ஒன்றுகூடக் கிடைக்காது போய்விடும்.

திரு. கமலையா இந்திய அரசின் தலைமை அமைச்சர் அலுவலகத்தில் உயர்ந்த பொறுப்பு வகித்து ஓய்வு பெற்றவர். அலுவலக வாழ்க்கையில் ஓய்வு பெற்றுல்கூட இலக்கிய வாழ்வில் ஓய்வு பெருது இலக்கியத் தொண்டாற்றி வருபவர். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் அவ்வப்போது தம் உள்ளத்தில் ஊற்றெடுத்த இலக்கிய ஆர்வத்தின் காரணமாகக் கட்டுரைகள் எழுதியும் வானெலிச் சொற்பொழிவுகள் ஆற்றியும் வந்துள்ளார். அவற்றின் தொகுப்பே 'நமது பண்பாடு' என்னும் இந்நூல்.

இலக்கியத்தில் அவருக்குள்ள ஈடுபாட்டைக் கட்டுரைகளில் ஆங்காங்குப் பெய்துள்ள பொருத்தமான மேற்கோள் பாடல்களிலிருந்தும், கட்டுரைகளுக்கு அவர் கொடுத்துள்ள தலைப்புகளிலிருந்தும் காண முடிகின்றது. 'அன்பு விழியும் இன்பச் செவியும்', 'தவம் செய்த தவமாம் தையல்', 'வாய்முத்தம் சிந்தி விடுமோ' என்பன சில தலைப்புகள்.

பத்துப்பாட்டுள் ஒன்ருன முல்லைப் பாட்டின் நயத்தை விளக்க எழுந்த முதல் கட்டுரையிலிருந்து நாட்டுப்பாடல் வகையான அவலப் பாடலின் சுவையை விளக்கும் இறுதிக் கட்டுரைவரை பலவகையான கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

காரைக்காலம்மையாரைப் பற்றிய கட்டுரையும், குற்ருலக் குறவஞ்சியின் பல்வேறு சிறப்புகளை எடுத்துக்கூறும் 'ஓர் ஆராய்ச்சிக் கருவூலம்' என்ற கட்டுரையும் அவர்தம் ஆராய்ச்சித் திறனை நன்கு புலப்படுத்தும் கட்டுரைகள்.

கட்டுரைக்கே உரிய கடின நடையைக் கையாளாது கற்போர் உளங்கவரும் வகையில் எளிய இனிய நடையை ஆசிரியர் கையாண்டுள்ளார். ஆசிரியர் தம் முன்னுரையில் கூறுவதுபோல அவர்தம் கட்டுரைகள் இலக்கியத்தை ஊன்றிப் படிக்கும் ஆர்வத்தைக் கிளறும் வகையிலேயே அமைந்துள்ளன எனலாம். மொத்தத்தில் இந்நூல் சிறந்த கட்டுரைக் கருவூலம்.

நூல் மதிப்புரை: நமது பண்பாடு (கட்டுரைகள்) க. சி. கமலையா. தமிழ்ப் புத்தகாலயம். 180 பக். ரூ. 5-00.

கவிதை

உரைநடை, கவிதை ஆகியன பற்றிய என் விளக்கத்தைக் கவிதை இளஞ் செல்வர்கள் கூர்ந்து கவனித்தல் வேண்டும். உரைநடை என்பது சொற்களின் மிகச் சிறந்த ஒழுங்கமைதி. கவிதை என்பது மிகச் சிறந்த சொற்களின் மிகச் சிறந்த ஒழுங்கமைதி.

—கவிஞர் காலரிட்ஜ்.

செய்திகளும் குறிப்புகளும்

ஆளுநர் கூறிய அரிய உண்மை !

தேன்பாக்கம் என்னும் சிற்றூரில் தங்கியிருக்கும் காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரியா ரவர்களை, அண்மையில், தமிழக ஆளுநர் மாண்புமிகு கே. கே. ஷா அவர்கள் தம் துணைவியாருடன் காணச் சென்றிருந்தார். சென்று கண்டு உரையாடியபோது, "தமிழே இந்திய மொழிகளுள் முதன்மை பெற்றது. அதனையடுத்தே சமஸ்கிருதம் வளர்ச்சி பெற்றது. அதனைச் செம்மைப் படுத்தியவர் 'பாணினி' என்பவ ராவார்" என்னும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

கூறவேண்டிய உண்மையைக் கூற வேண்டியவரிடம் கூறவேண் டியவர் கூறிவிட்டது மகிழ்ச்சிக்குரிய செய்தியல்லவா?

பட்டமளிப்பு விழாவில் அறிவுரை

ஆளுநர் ஷா அவர்கள், அடுத்து அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசிய காலை இதே கருத்தினை வலியுறுத்தி யுள்ளார். ஆனால், சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்கும் இடையே ஒற்றுமை வளர வேண்டும் என்னும் கருத்தினையும் வெளியிட்டுள்ளார். ஆரியர்—அல்லாதார், என்னும் பேச்சுப் பொருளற்றது என்பது போலவும் பேசி யுள்ளார். எது எப்படி இருப்பினும் தமிழின் தொன்மையை அவர் உணர்ந்திருக்கும் அளவு குறித்து மகிழ்ச்சியடைய வேண்டியதே.

டாக்டர் சேதுப் பிள்ளைக்குச் சிலை அமைத்தல்

25—3—73 இல் நடைபெற்ற, சொல்லின் செல்வர் சேதுப் பிள்ளை செந்தமிழ்ச் சங்கத்தின் முதலாண்டு நிறைவிழாவில் பேசிய தமிழகக் கல்வியமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் டாக்டர் சேதுப் பிள்ளை அவர்களின் சிலையொன்றைச் சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடத்தில் அமைத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டார். இவ் விழாவிற்குச் சென்னை உயர்நீதி மன்ற நடுவர் திரு. எஸ். மகராஜன் தலைமை தாங்கினர். சங்கச் செயலர் டாக்டர் எஸ். சங்கர் வரவேற் புரை நிகழ்த்தினர். திரு. கே. பக்தவத்சலம் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

கல்வியமைச்சரின் கருத்து விரைவில் சொல்லின் செல்வரின் சிலையாக உருப்பெறும் என நம்புகிறோம்.

பெண்களே அதிகமாக நூல் பயில்கின்றனர்

படித்த ஆண் - பெண் பாலாரிடையே அதிகமாகப் புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் யாரிடம் உள்ளது—ஆண்களிடமா? பெண்களிடமா? என்ற ஆராய்ச்சியில் நாட்டுப் புத்தகக் காவலர் (The National Book Trust) அண்மையில் ஈடுபட்டனர். இந்த ஆராய்ச்சி புதுதில்லியில் நடைபெற்றது. அதில் கணக்கெடுத்துப் பார்த்ததில் ஆண்கள் 26

விழுக்காடும், பெண்கள் 41 விழுக்காடும் நூல்களை விரும்பிப் படிக்கின்றனர் என்றும் எந்த நூலையும் விரும்பிப் படிக்காதவர் கூட்டத்தில் ஆண்கள் 24 விழுக்காடும், பெண்கள் 18 விழுக்காடும் உள்ளனர் என்னும் உண்மை புலனாயிற்று.

கரந்தைத் தமிழ்ச்சங்க மணிவிழா

தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களின் சிலையைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்து வைக்க—கல்வியமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்களும், உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்களும் தலைமைதாங்க—தமிழறிஞர்களின் கருத்தரங்கு, கவியரங்கு, பட்டிமன்றம் முதலியன நிகழ—முறையே ஏப்பிரல் 13, 14, 15 ஆம் நாள்களில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் மணிவிழா சிறப்பாக நடைபெறும்.

ஆனந்தரங்கம் பிள்ளை 264 ஆவது பிறந்தநாள் விழா

புகழ்பெற்ற நாட்குறிப்பு ஆசிரியராக விளங்கிய புதுவை ஆனந்தரங்கம் பிள்ளையவர்களின் 264 ஆம் பிறந்தநாள் விழா, பெரும்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் தலைமையில் புதுவையில் 5—4—73 இல் சிறப்பாக நடைபெற்றது. அறிஞர்கள் பலர் திரு. பிள்ளை அவர்களின் சிறப்பியல்புகளையும் அறிவாற்றல்களையும் பாராட்டிப் பேசினர். ஆனந்தரங்கம் பிள்ளை வீதியிலுள்ள அவரது வளமனையைக் குழந்தைகள் இல்லமாக அமைப்பதாக ஆனந்தரங்கம் பிள்ளையின் மரபினர் திரு. ஆனந்த கிருட்டிணசாமிப் பிள்ளை அறிவித்தார்.

மதிப்புரை

டாக்டர் கலைஞர் கருணாநிதி-தோழிவிடுதூது

[ஆசிரியர்: புலவர் ஆனை நரசிங்கப் பெருமாள், முதல்வர், புலவர் செந்தமிழ்க் கல்லூரி (மாலை வகுப்பு) கோதண்டராமசாமி கோயில் தெரு, சென்னை-33. விலை ரூ. 1—50.]

கலைஞர் கருணாநிதி அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு இயற்றப்பட்டுள்ள இந்நூல் கலைஞர் அவர்களின் சிறப்பியல்புகளைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளது. கலைஞர் அவர்களின் அறிவுத்தந்தையாகிய பேரறிஞர் அண்ணா அவர்களை வள்ளுவனின் மறுபிறப்பாகவும், கலைஞர் அவர்களைக் கம்பன், இளங்கோ, இராசராசன் ஆகிய மூவரும் ஒருருக்கொண்டு தோற்றிய பிறப்பாகவும் கற்பனை செய்திருப்பது சாலச் சுவை பயப்ப தொன்றாகும்.

கலைஞர் அவர்களின் தகைசால் பண்புகளில் நெஞ்சைப் பறிகொடுத்த நங்கையொருத்தி தன் தோழியிடம் அக்கலைஞர் பெருமானின் சீர்மைகளையெல்லாம் முறைப்படுத்திக் கூறி அவரிடம் சென்று தன்

காதலைச் செவ்வி தேர்ந்து இங்கிதமுடன் எடுத்தியம்பி வருமாறு வேண்டிக் கொள்ளும் வகையில் கலைஞர் அவர்களின் வாழ்க்கைக் காவியமே வரன் முறையில் தரப்பட்டுள்ளது.

"பைந்தமிழை மூச்செனவே கொண்ட முதலமைச்சன்"

"மறுவாழ்வுத் திட்டத்தின் மன்னன்"

"புலவரெலாம் பாடும் புகழுடையோன் சீர்சால் புலமைத் தலைவன்"

என்றெல்லாம் பண்புநலன்களைப் பகர்வதுடன், உருவநலன்களைத் தலைமுதல் கால்வரை உரைக்கத் தொடங்கி,

"நேர்மையைக் காட்டுகின்ற நேர்வகிடும், என்பது முதலாகச்
"சீர்திருத்தம் என்னும் சிறந்ததோர் கொள்கைக்காப் பார் நடந்த கால்களும்"

என்பதிருகப் பத்துக்கண்ணிகளில் இயம்பப்பட்டுள்ளன.

வள்ளுவரின் குறள் மொழிகள் ஆங்காங்குப் பொருத்தமுற இணைந்து நின்று பொலிவூட்டுகின்றன. தமிழ்ப்பற்றுளர் அனைவரும் ஓதிச் சுவைத்தற்குரிய நூல்.

நுண் கலைகள்

[ஆசிரியர் : மயிலை சீனிவேங்கடசாமி. நூல் கிடைக்குமிடம்: மணிவாசகர் நூலகம், சென்னை-1. விலை ரூ. 3—50.]

ஆய்வு நூல்கள் பலவற்றின் ஆசிரியராகிய திரு. மயிலை சீனி வேங்கடசாமி அவர்களால் இயற்றப் பெற்ற 'நுண்கலைகள்' என்னும் இந்நூலில் நுண்கலைகள் பதின்மூன்றனைப் பற்றி அரிய விளக்கங்கள் பல தரப்பட்டுள்ளன. அப்பதின்மூன்றுவன : (1) கோயில் கட்டடங்கள் (2) கோயில் சிற்பங்கள் (3) சித்திரச் செய்தி (4) பழங்காலத்து இசைநயம் (5) ஆடற் கலை (6) நாடகக் கலை (7) காவியக் கலை (8) குழல்-வங்கியம் (9) பண்டைய மகளிர் பந்தாட்டம் (10) கொல்லிப் பாவை (11) பழங்காலத்து அணிகள் (12) தமிழக முத்துக்கள் (13) பழங்காலத்து எழுதுகருவிகள் என்பனவாகும். இக்கலைகள் அனைத்திற்கும் இலக்கிய மேற்கோள்களும், இயன்றவற்றிற்கு வரலாற்றுக் குறிப்புகளும் காட்டப்பட்டுள்ளமை இந்நூலின் தனிச் சிறப்பாகும். இசைக்கலை, ஆடற்கலை, நாடகக்கலை பற்றிய விளக்கங்கள் போற்றத்தக்க முறையில் அமைந்துள்ளன. காவியக்கலை என்னும் தலைப்பில் காவியச்சுவைநலம் புலப்படுத்தும் பொருட்டுக் காட்டாகத் தரப்பட்டுள்ள செய்யுள்கள் ஆன்றவின்பம் பயப்பன வாகும்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

யாப்பருங்கலம் (பழைய விருத்தியுரையுடன்)
பதிப்பாசிரியர்: புலவர் இரா. இளங்குமரன் ரூ. 18 00

முத்துவீரியம்—முத்துவீர உபாத்தியாயர்
பதிப்பாசிரியர்: கு. சுந்தரமூர்த்தி ரூ. 15 00

பெருந்தேவனார் பாரதம்:
பதிப்பாசிரியர்: புலவர் இரா. இளங்குமரன் ரூ. 10 00

இலக்கண விளக்கம் (எழுத்து, சொல்)
பதிப்பாசிரியர்: புலவர் சேயொளி ரூ. 12 50

திருமுருகாற்றுப் படைத்திறன்
ஆசிரியர்: கு. கோதண்டபாணி பிள்ளை ரூ. 6 00

வேர்ச்சொற் கட்டுரைகள்
ஆசிரியர்: மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் ரூ. 10 00

வெளிவரவிருக்கும் புதிய வெளியீடுகள்

களவியற் காரிகை

பதிப்பாசிரியர்: புலவர் இரா. இளங்குமரன்

களவியல் பற்றிக் கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த அரிய அகப்பொருள் இலக்கண நூல் களவியற் காரிகை ஆகும்.

இறையனார் களவியலில் மேற்கோளாகக் காட்டப்பெறும் கோவைப்பாடல்கள் பாண்டிக்கோவை என்னும் நூலைச் சேர்ந்தன என்பது இந்நூலால் அறியப் பெற்றதாகும். அவ்வாறே அகத்திணை, அரையர்கோவை, இன்னிசைமாலை, கண்டனலங்காரம், கிளவித் தெளிவு, கிளவி மாலை, கிளவி விளக்கம், கோயிலந்தாதி, சிற்றெட்டகம், நறையூர் அந்தாதி, பல்சந்தமாலை, பொருளியல், வங்கர் கோவை முதலிய நூல்களின் பெயர்களும் அவற்றின் சிறந்த மேற்கோள் பாடல்களும் இந்நூலால் இனிதின் அறியக் கிடக்கின்றன. பல்வகை விளக்கக் குறிப்புகளுடன் விரைவிலே வெளிவரும்.

அகத்திரட்டு

தொகுப்பாசிரியர்: புலவர் இரா. இளங்குமரன்

புறத்திரட்டுப் போன்றதோர் அரிய தொகுப்பு நூல் 'அகத்திரட்டு' ஆகும். இதன்கண் கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறுகப் பரந்து கிடக்கும் அகப்பொருள் 84 அதிகாரங்களில் சுவைமிக்க பாடல்களாகத் தேர்ந்து புலவர் இளங்குமரனவர்களால் தொகுக்கப் பெற்றுள. இதன்கண் 1144 பாடல்கள் உள.

பண்டைத் தமிழ்ப்பாடல்கள், பாடல்கள் மட்டுமல்ல; பண்டைப் பாட்டர் பேரர்க்கு வைத்த பெருஞ்சொத்து என்பதை உணரத் துணைசெய்யும் அரிய கருவூலமாக அமைந்தது இத்திரட்டு நூல். துறைவாரியாக அகப்பொருளை ஆராய விழைவார்க்கும், தமிழின்பம் துய்க்க விழைவார்க்கும், கதை புனைய விழைவார்க்கும், கட்டுரை சொற்பொழிவுகளுக்கு மேற்கோள் எடுத்தாள விழைவார்க்கும் தேடி வைத்த திருவென உதவும் ஒருநூல். விரைவிலே வெளிவரும்.

பிற பதிப்பாளரின் வெளியீடுகள்

அறநூல் - உரையுடன்—சுகவனம் சிவப்பிரகாசம்

திருக்குறள் அறத்தினை நாற்சீர்கொண்ட 380 அடிகளில் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் அரிய நூல். 3 50

திருக்குறள் நூற்பா—சுகவனம் சிவப்பிரகாசம்

1330 குறட் கருத்துக்களை நாற்சீர்கொண்ட 1330 அடிகளில் அகற்பாவால் விளக்கும் பயனுள்ள நூல். 1 75

அடிசிற் கினியாள்—டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி

சங்க இலக்கியங்கள் பலவற்றினின்றும் தொகுக்கப்பட்டுள்ள 11 கருத்துரைகளின் தொகுப்பு. 2 25

இலக்கிய நினைவுகள்—டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பாரதம் ஆகியவற்றினின்று தொகுக்கப்பட்டுள்ள சில ஆராய்ச்சிக் கட்டுரைகள். 2 50

உப்பங்கழி—டாக்டர் வ. சுப. மாணிக்கம்

பல புதிய சீர்திருத்தக் கருத்துக்களடங்கிய சமுதாய நாடகம். 4 50

சிலம்பில் துணைப் பாத்திரங்கள்
—டாக்டர் கா. மீனாட்சி சுந்தரனார்

சிலப்பதிகாரம் பற்றிய ஒரு திறனாய்வு நூல். 6 00

Indian Temple Styles The personality of Hindu architecture—K. V. Soundararajan 80 00

Tandava lakshanam [Dancing poses in Chidambaram Temple]
—B. V. Narayanaswami Naidu 45 00

Tamil Studies (First Series)
—A. V. Subramania Aiyar 5 00

,, Second Series 6 00

Kandar anubuthi—N. V. Karthikeyan 8 00

Life of St. Arunagirinathar ,, 1 50

Semantic Variation of Some Sanscrit Words in Hindi and the major Dravidian languages—Dr. S. N. Ganesan 8 00

India of my dreams—C. Subramaniam 30 00

Coins of Southern India—Sir Walter Elliot 60 00

அப்பர் அச்சகம், சென்னை-1.